198

Registered No. M. 1926

உ
கடவுள் துணை.



10 OCT 1924

# தர்மபோதினி.

தர்மபுரி என்னும் தலத்தினின்றும் மாதந்தோறும் வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை.

"செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம், அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை"—திருக்குறள்

தொகுதி 1 Vol 1 | இரக்தாக்ஷி-ஸ்ரீ ஆவணி-மீ AUGUST 1924. | பகுதி 5 No. 5

உள்ளுறை


| | | பக்கம். |
|---|---|---|
| 1 | கடவுள் வணக்கம் .... .... | 129 |
| 2. | சில நவீன கல்விஸ்தாபனங்கள் II. .... | 130 |
| 3. | காலஞ்சென்ற திருவாங்கூர் ராஜா .... | 133 |
| 4. | கிராமவாழ்க்கை .... .... | 136 |
| 5. | நாம் சித்தியடைவதெப்படி .... .... | 139 |
| 6. | அஜாதசத்ரு பௌத்தனாதல் .... | 144 |
| 7. | பாலபருவமும் அதன் பராமரிப்பும் .... | 146 |
| 8. | நமது பண்டைநாள் .... .... | 149 |
| 9. | உண்டியின் தூய்மை .... .... | 151 |
| 10. | சிவப்பிரகாசசுவாமிகளைப்பற்றியசிலகதைகள் II | 154 |
| 11. | கணிதவினா .... .... .... | 159 |
| 12. | குறிப்புகள் .... .... .... | 160 |

# " தர்மபோதினி"

ஏஜெண்டுகள் தேவை!

தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்!!

தெய்வபக்தி நல்லுணர்ச்சி, கல்வி, நாகரீகம், சரித்திர ஆராய்ச்சி, இயற்கை ஞானம் ஆகிய அருமையான விஷயங்களடங்கிய ஓர் சிறந்த செந்தமிழ்ப்பத்திரிகை. சந்தா தொகையை முன்பணமாக அனுப்பவேண்டும். அல்லது வி.பி மூலமாய் முதல் சஞ்சிகையை ஒரு வருஷ சந்தாவைச்செலுத்திப் பெற வேண்டும். வருஷ சந்தாவை மணிஆர்டர்செய்து பத்திரிகையைத் தருவித்துக்கொள்வது லாபகரமானது.

## வி. பி. செலவு பிரத்தியேகம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உள்ளூர் வாசிகளுக்கு வருஷ சந்தா | | ரூ. | 1 | 4 | 0 |
| வெளியூர் வாசிகளுக்கு | .... | ,, | 1 | 8 | 0 |
| வெளிநாடுகளுக்கு | .... | ,, | 2 | 8 | 0 |
| தனிப்பிரதி .... | .... | ,, | 0 | 3 | 0 |
| ஜீவிய சந்தா .... | .... | ,, | 25 | 0 | 0 |

பத்திராதிபர், தர்மபோதினி, தர்மபுரி.

## அறிவிப்பு.

வியாபாரிகளே!

உங்கள் சரக்குகள் நாடெங்கும் பரவி நல்ல லாபம் கொடுக்க " தர்மபோதினி "யில் விளம்பரஞ் செய்யுங்கள். சொற்ப செலவில் வெகுதூரத்திலுள்ளவர்களுக்கும் உங்கள் சரக்குகளைப்பற்றி அறிவித்து வியாபாரத்தை விருத்தி செய்து கொள்ள ஏற்ற சாதனம்.

விவரங்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர்,
" தர்மபோதினி "
தர்மபுரி, சேலம் ஜில்லா



உ

கடவுள் துணை.

# தர்மபோதினி.

—:0:—

தெய்வபக்தி, நல்லுணர்வு, கல்வி, நாகரீகம், இயற்கைத் தத்துவங்கள், சரித்திர ஆராய்ச்சி, இலக்கண இலக்கிய நுட்பங்கள், முதலியவற்றுடன் வெளிவந்துலாவும் ஓர் உயர்ந்த மாதாந்தத்தமிழ்ப்பத்திரிகை.


தொகுதி 1 } இரக்தாக்ஷி-ஹூ ஆவணி-மீ { பகுதி 5
Vol 1 } AUGUST 1924. { No. 5


## ஸ்ரீ கணேசர் துதி.

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின்முற்றுறக்
கண்ணுதலுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணுவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

(திருவிளையாடல்)

அருமறையின் சிரப்பொருளாய் விண்ணவர்மா
முனிவர்சித்த ராதி யானோர்
தெரிவரிய பூரணமாய்க் காரணங்கற்
பனைகடந்த செல்வமாகிக்
கருதரிய மலரின்மண மெள்ளிலெண்ணெ
யுடலுயிர்போற் கலந்தெந் நாளுந்
துரியநடு வூடிருந்த பெரியபொரு
ளியாததனைத்தொழுதல் செய்வாம்.

(தாயுமானவர்)

# சில நவீன கல்வி ஸ்தாபனங்கள்—II.

(103-வது பக்கத்தின் தொடர்ச்சி)

1918-ம் வருஷத்தில் கல்கத்தாவிலுள்ள கலாசாலையின் உப அத்தியக்ஷகராகவிருந்த அசுடோஷ் முகர்ஜீ யென்பவர், இப்பிரிடிஷ் சாம்பிராஜ்ஜியத்தேயுள்ள ஒவ்வொரு சர்வ கலாசாலைக்கும், தவிர, இதர தேசங்களிலுள்ள முக்கியமான கழகங்களுக்கும், இத்தேசத்தில் அளவிடமுடியாமல் வேலையின்றித்தவிக்கும் கல்வி ஞானம் பெற்ற சிறுவர் சிறுமிகளை யெவ்விதம் நடத்தினால் தேசமும் தேச ஜனங்களும் நன்மைபெறக்கூடுமென்ற விஷயமாக ஒரு திட்டம் தயாரித்து அனுப்பினார். அத்திட்டம் எல்லா நிபுணர்களாலும் அங்கீகரிக்கப்பட்டது. 1920-ம் வருஷத்தில் கல்கத்தா சர்வ கலாசாலையில் அத்திட்டத்தை அனுஷ்டானத்திற்கும் கொண்டுவரக்கூடிய முறைகளை ஆராய்வதற்காக, வறுமை [illegible]மையைப்பற்றி ஆராயும் சங்கமொன்றை ஸ்தாபித்தார்கள். எல்லா ஜனங்களுக்கும் உணவும் சுதந்திரமும் எளிதில் சித்திக்கும் மார்க்கத்தைத் தேடுவதுதான் அதன் நோக்கம்.

மானிட வர்க்கத்தின் க்ஷேமாபிவிருத்தியைக் கோரும் ஓர் சங்கத்தின் நடவடிக்கைகள் உடனேயோ அல்லது சீக்கிரத்திலேயோ யாவருக்கும் நன்மை பயக்கக்கூடியவையாயிருக்க வேண்டும். முற்கூறிய சங்கத்தின் காரியதரிசிகளான, மிஸ்டர் படேவல் என்பவரும் மிஸ்டர் எஸ். ஸி. தத்தர் என்பவரும், தங்களால் தயாரிக்கப்பட்ட ஓர் சிறந்த திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

கல்வி பயிலுவதின் நோக்கம், விஷயங்களை யறிவதுமட்டுமல்ல. இது மத்திமமான நோக்கம். சிறுவர்களின் மனதை நற்காரியங்களில் திருப்பி நன்மை பயக்கக்கூடிய சேவை செய்யத் தூண்டுவதே உத்தமமான நோக்கம் என்பதைத் தற்காலத்திய நிபுணர்களும் ஸாக்ரடீஸ், ப்ளேடோ முதலிய முற்காலத்திய தத்வ ஞானிகளும் கூறியிருக்கிறார்கள். சிறுவர்கள் விளை

யாட்டுத்தன்மையுடையோர்களாதல்பற்றி சரியான கல்வி முறையில், ஏராளமாய் விளையாடுவதுடன், விஷயங்களிலும் ஊக்கமாய் அறிவு ஊட்டப்பெறும் குழந்தையின் அறிவு; விருத்தியடைந்து விசாலமாகும். வளரும் செடி கொடிகளுக்குச் சூரியக்கிரணமும் வெப்பமும் எவ்விதமோ அவ்விதமே, பாலர்களுக்கு யதேச்சையான விளையாட்டுகள் அவசியம். மேலும் கல்விமுறையானது அனேகவிதமான பயிற்சியை யளிக்கக் கூடியதாகவிருக்கவேண்டும். நல்ல ஊதியமளிக்கும் வேலைகளிற் பயிற்சியும், ஊக்கமளிக்கும் விளையாட்டுகளில் விருப்பமும், அஞ்ஞானத்தை யோட்டி அறிவை யூட்டும் முறைகளில் ஆற்றலும், எம்முறையைக் கையாளுவதனுல் ஒருங்கே ஏற்படுமோ, அஃதே எங்குமிருக்கவேண்டுமென்பதை எல்லாரும் கோருவர். இக்காலத்தில் சிறுவர்களுக்கு பள்ளிக்கூடங்களில் ஊதியமளிக்கக்கூடிய வேலைகளில் பயிற்சியளிப்பதில்லை யெனவே சொல்லலாம்.

கிரேக்க நிபுணரொருவர், அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னர், கல்விமுறையின் அடிப்படையான தத்வம், சிறுவர்கள் தங்கள் பெரியோர்களுடன் ஒத்துழைத்து விருத்தியடைவதே யென வரைந்திருக்கிறார். இத்தத்வத்தை இக்காலத்திய பள்ளிக்கூடங்களில் அவலம்பிக்கவேண்டிய அவசியத்தை யிங்குக் கூறுவோம்.

நம் தேசத்துக் கடைகளில் விற்கப்படும் அநேக சாமான்களின் கிரயம், அவற்றைச் செய்யலாகும் செலவைப்போல் அநேகமடங்கு என்றறிந்திருக்கிறோம். மேலும், அவற்றைச் செய்வதில், தற்கால சாஸ்திரிய முறைகளைக் கையாளுவதனுல் செலவு மிகவும் குறைந்துவிடுமெனக் கூறுவதற்குத் தடையென்னவிருக்கிறது? எனவே, ஒரு கல்விக்கழகத்தில் வறுமை நோயால் வருந்தும் மக்கள், வாசிக்கும்போதே, தம் வீட்டிற்கு அவசியமெனக் கருதும் பண்டங்களைச் செய்யவோ அல்லது சேகரிக்கவோ, கற்றுக்கொள்ளமுடியுமானுல் சௌகரியமல்லவா? தினந்தோறும் பாதிநேரம், கல்விபயின்றும், மற்றநேரம்,

இவ்விதமான வேலைகளில் பயிற்சியும் பெற்றுவருவார்களாயின் நன்மை யேற்படுமல்லவா? பள்ளியைவிட்டு, வீட்டிற்கேகும் போது, தங்கள் கைகளாலேயே செய்யப்பட்ட சாமான்களைத் தம்முடனே எடுத்துச் செல்லலாகும். ஆரம்பத்தில், வேண்டிய பயிற்சி யேற்படும்வரையிலும், சிறுவர்களின் அனுபவம் முதிரும்வரையிலும், பெரியவர்களின் உதவியவசியமே. ஆனால், அங்கிருந்து வரும் இளைஞரும், முதியவரும், தாங்கள் செய்யும் வேலைக்குத்தக்க ஊதியமடைகிறார்களாதலால், நஷ்டமேற்படச் சிறிதும் காரணமில்லை. இதை, ஹோரஸ் ப்ளங்கட் என்று ஐயர்லாந்து தேசத்துக் கூட்டுறவு இலாகா நிபுணரும் ப்ரொபஸர் சார்லஸ் கைட் என்ற பிரான்சுதேசத்து நிபுணரும், அமெரிக்கா தேசத்து ப்ரொபஸர் கார்வர் என்பவரும், இந்தியாவிலேயே, ஸர் டின்ஷா வாசா, ஸர். டி. பி. ஸர்வாதிகாரி முதலிய பிரமுகரும் ஆதரித்துள்ளார்! இம்முறையைக் கையாண்டால், சிறுவர்களுக்குக் கல்விப்பயிற்சியும், வேலைப்பயிற்சியும் ஏற்படுவதுந்தவிர, இத்தேசத்தினின்று கொடியவறுமை நோயுமோடிவிடுமன்றோ?

சிலநாட்களாக முற்கூறிய கொள்கைகளுடன் கல்கத்தா நகருக்கருகில், (Maharajah of Kossimbazaar's Polytechnic Institute) காசிம்பஜார் மகாராஜா சித்திரவேலைக்காரியாலயம் என்ற பெயருடன் 1-ஸ்தாபனம் நடத்தப்பட்டுவருகிறது. அங்குக் கல்விபயிலும் சிறுவர்களுக்கு இருவிதமான பயிற்சிகளையுமளித்து வருகிறார்கள். பரேஸ்நாத் என்ற குன்றின் சாரலில், பூமியைச் சிறுபாகங்களாகச்செய்து அநேக கல்விகற்ற சிறுவர்களுக்குச் சுவாதீனம்செய்து கொடுத்து அங்குவிளையும் தானியங்களை அவர்கள் ஆகாரத்திற்கு உபயோகப்படுத்துகிறார்கள். இவற்றைத் தவிர, ஒரு நடுத்தரப்பள்ளிக்கூடம் அங்கே கட்டப்பட்டு, அநேகருக்கு சாதாரணக்கல்வி யளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இது இன்னும் ஆரம்பதசையிலிருக்கிறபோதே, அளவற்ற நன்மைகளை யளிக்கக்கூடுமாயின், நாளாவட்டத்தில் இதனால் அதிக நன்மைகளேற்படுமென்பதிற் சந்தேகமில்லை.

இம்மாதிரியான கல்விஸ்தாபனங்கள் தேசமெங்கும் ஸ்தாபிக்கப்பட்டு, அதனால் இத்தேசத்தின் வறுமை நீங்கி, ஜனங்கள் க்ஷேமத்தைச் சீக்கிரமேயடைய எல்லாம் வல்ல இறைவன் கடாக்ஷிப்பாராக.

# காலஞ்சென்ற திருவாங்கூர் மகாராஜர்.

நாளது ஆகஸ்ட்-மீ 7-உ ராத்திரி சுமார் 12-மணிக்குத் திருவாங்கூர் மன்னர் மேன்மைதங்கிய ஸ்ரீ பத்மனுப தாஸ வஞ்சி பால ஸ்ரீராமவர்ம குலசேகர கிர்த்திபதி மன்னே சுல்தான் மகாராஜ ராமராஜ பகதூர் ஷாம்ஷர்ஷிங், ஜி. ஸி. ஐ. இ., ஜி. ஸி. எஸ். ஐ., எம். ஆர். ஏ. எஸ், தேகவ்யோகம் அடைந்தார் எனக் கேள்வியுற்று இத்தேசத்தாரெல்லாரும் மகா துக்கத்தை யடைந்தார்கள். இப்பெரும் மகானின் மரணத்தினுல் துக்கத்திற் காளான திருவாங்கூர் ராஜ்ஜிய வாசிகளுக்கும், அன்னுரின் குடும்பஸ்தர்களுக்கும் நம் அநுதாபத்தைக் காட்டுவதுந்தவிர, எம்பெருமானை அவர்களுக்கு ஆறுதலளிக்குமாறு வேண்டுகிறேம்.

## அம்மன்னரின் ஜீவியசரித்திரம்.

பிறந்தநாள் 1857-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 25-தேதி.
மகுடந்தரித்தநாள் 1885-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 19-தேதி.
தேகவ்யோகமடைந்தநாள் 1924-ஞு ஆகஸ்டு-மீ 7-தேதி.

ராணி லக்ஷ்மீபாய் என்னும் மாதாசிக்கு அவருடைய 28-வது வயதில், ராமவர்மா அவர்கள் பிறந்தார். ஆனுல் இவர் பிறந்த சில நாட்களில், அந்த அம்மாள் காலகதியடைந்தார். அவருக்கு அச்சமயம் திவான் பேஷ்காராராகவிருந்த ஸ்ரீமான் ரகுநாதராவும், மகாராஜா கல்லூரியில் தலைமை வகித்த ஸ்ரீமான் அண்ணுஜிராவும் கல்வி போதித்துவந்தார்கள். சம்ஸ்கிருத பாஷையிலும் ஹிந்துஸ்தானி பாஷையிலும் அறிவைப்புகட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சங்கீதத்தில் அவருக்குப் பிரியம் அதிகம். டென்னிஸ் விளையாடுவதிலும் வெகு விருப்பம். மேனுட்டு ஆசாரங்களில் சிறந்தனவற்றைத் தம் நாட்டு சம்பிரதாயங்களிலும் கலந்து அனுஷ்டித்துப் பிறருக்கொரு கைகாட்டியாயிருந்தார். இப்பரந்த பரதகண்டத்துள்ள பலதேசங்களைப் பன்முறைச்சுற்றிச் சென்று தமது அனுபவத்தை விருத்தியாக்கிக்கொண்டதுமன்றி, தம்பிரஜைகளின் உரிமைகளை வெகுவாகப் பெருக்கத்தொடங்கினுர்.

அவர் அரசாக்ஷியின் பெருமையை அவர் 39-வருஷகாலம் நீதியுடன் செங்கோல் நடத்தினர் என்பதே சிறப்பித்துக்கூறுகிறது. திருவாங்கூர் இராஜ்ஜியம் சிறியதேயாயினும் இவரது ஆளுகையில் மிக்க உன்னத ஸ்திதியை அஃது அடைந்துவிட்டது. இந்தியா கவர்ன்மெண்டார் இச்சிறு இராஜ்ஜியத்துடன் நேரே சம்பந்தங்கள், இவருடைய காலத்திலேற்படுத்திக் கொள்ள முன்வந்தது முற்கூறியதின் உண்மையை வெளிப்படுத்துகின்றதன்றோ? விஸ்தீரணத்தை ஆதாரமாகக் கொண்டு பார்க்கின், இந்தியாவிலுள்ள சமஸ்தானங்களுக்குள், திருவாங்கூர் ராஜ்ஜியம் 17-வதாக இருக்கிறது. ஜனத்தொகையில் 3-வதாக இருக்கிறது. வருமானத்தை உத்தேசிக்கில் 4-வதாக இருக்கிறது. கல்வியறிவை யுத்தேசித்துப்பார்க்கின் முதன்மை ஸ்தானம்பெற்ற பரோடாசமஸ்தானத்திற்கு அடுத்த படியிலிருக்கிறது. கல்விகற்கும் வயதுடைய சிறுவர் சிறுமிகளில் 1000-க்கு 684-பேர் பள்ளிக்கூடங்களில் வாசித்துவருகிறார்கள். சாதாரணமாக ஒவ்வொரு கிராமத்தில், சர்க்காரின் மேற்பார்வைக்குட்பட்டு ஒரு பள்ளிக்கூடமாவது இருந்துவருகிறது. இவைகளைத்தவிர பெண்கல்வியிலும் கைத்தொழிற் பயிற்சியிலும், திருவாங்கூர் தர்பார் மிக்க பிரயாசை எடுத்துக் கொண்டிருக்கிறது குறிப்பிடவேண்டிய விஷயமே. கோளசர்வ கலாசாலை ஏற்படுத்தவும், தாய்பாஷைக்குப்போதிய அந்தஸ்து அளிக்கவும், வாசிக்கும் மாணவர்களுக்கு சிறு கைத்தொழில்கள் கற்றுக்கொடுக்கவும், விவசாயம் கைத்தொழில், காடு இவை சம்பந்தமானவற்றில் முன்னேற்றமடைவதிலும், ரயில்வே, படகு முதலியவற்றின் மூலமாகப் போக்குவரவு சாதனங்களை விருத்திசெய்யவும், ஆயுர்வேதத்தின்படி ஏற்படுத்தப்பட்ட வைத்தியசாலைகளைக் காக்கவும், பல திட்டங்களைத் தயாரித்து வருவதாக வறிகிறோம்.

மற்ற சமஸ்தானங்களைவிட, இங்கு, பிரஜா உரிமைகள் அதிகமாக அளிக்கப்பட்டிருக்கின்றன. இவர் அரசுநடத்திய காலை, திவான் பகதூர் வி. பி. மாதவராவ், கஞ்சி கிருஷ்ணசாமி ராவ், ஸர். பி. ராஜகோபாலாசாரியார், கிருஷ்ணன்நாயர் முதலான 9 திவான்களும், 14 பிரிடிஷ் ரெஸிடெண்டுகளும் உத்தியோகஞ்செய்திருக்கிறார்கள். திவான்களை நியமிப்பதிலும்,

ரெஸிடெண்டுகளுடன் பழகுவதிலும், இவர் தம் நுண்ணறிவைக் காட்டியிருக்கிறார். வி.பி. மாதவராவ் திவானாக இருந்தபோழ்து ஒரு சட்ட சபையை ஏற்படுத்தினர். அப்போது அது 28 ஜனப் பிரதிநிதிகளையும், 25 உத்தியோகஸ்தர்களையும், 7 உத்தியோகப்பற்றற்ற நியமனஞ்செய்யப்பட்ட அங்கத்தினர்களையும் கொண்டிருந்தது. தற்போது சுமார் நூறு ஜனப் பிரதிநிதிகள் சேர்ந்து அச்சட்ட சபையில் பொது விஷயங்களைக் குறித்துக் கேள்விகளைக் கேட்கவும், வரவு செலவு திட்டத்தைக் குறித்து வாதிக்கவும் ஜனப் பிரதிநிதிகளுக்கு உரிமைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. ஸ்திரீகளுக்கும் ஆடவர்களுக்குஞ் சமமான வாக்குரிமை யளிக்கப்பட்டதுங் குறிப்பிடத்தக்கதே.

அவர் வெகு ஆடம்பரமற்ற வாழ்க்கையைக்கொண்டிருந்தார். சில விஷயங்களில் மிக்க ஆசார சீலராயும் வைதீக முறையில் பற்றுள்ளவராயுமிருந்தாலும், பிற மதஸ்தரிடம் மிக்க சகிப்புத் தன்மையைக்காட்டினர். தற்காலத்தில் ஐரோப்பிய நாடுகளைச்சுற்றிப் பிரயாணம் செய்வதிலும் குதிரைப்பந்தயங்களிலும், அயல்நாட்டு மாதரை மணந்து இல்வாழ்க்கை நடத்தி ஏராளமான செலவுகளைச்செய்யும் மன்னர்களிருப்பதையும் நாம் நன்கறிவோம். ஆனால் இவரோ தம் ராஜ்ஜியத்து மொத்த வரும்படியில் (1 கோடியே 80 லக்ஷம் ரூபாயில்) முப்பதில் ஒரு பாகத்தை (அதாவது 5 அல்லது 6 லக்ஷம் ரூபாயை)ச் சொந்தச் செலவுகளுக்கென ஒதுக்கிவைத்திருந்தார்.

அதிலும் ஏழைகளுக்குதவிசெய்வதில் விசேஷ செலவு செய்துவந்தார். தினந்தோறும் இருவேளையே உணவுகொள்வது அவர் வழக்கமாயிருந்தது. புலால் முதலியவற்றை ஸ்பரிசித்தறியார். பனி, மழை முதலியவற்றைப் பொருட்படுத்தாது காலை ஆறுமணிக்கே படுக்கைவிட்டெழுந்து உத்தியோகஸ்தர்களைக் காணத் தயாராயிருப்பார். 8 மணிக்குள் ஸ்நானம் முடித்துக் கொண்டு, பிறகு சாதாரண வைதீக ஹிந்துவைப்போன்று ஸ்ரீ பத்மநாபர் கோவிலுக்குச் சென்று அவர் தம் திருவடிகளைத் தரிசிப்பார். கல்வி யறிவாளர்களிடமும், ஏழைகளிடமும்

மிக்க அநுதாபங்கொண்டிருந்தார். செங்கோன் முறையிற் சிறந்த அம்மன்னர் விண்ணுலகிற்கேகியது திருவாங்கூர் ராஜ்ஜியத்திற்கு ஒரு பெரும் நஷ்டமென்பதற்கையமேதேனு முண்டோ?

11-வயதுள்ள இளைய ராணியின் புதல்வரே யுவராஜாவாயிருக்கின்றார். அவர் மேஜராகும்வரை, மூத்த ராணியே ரீஜண்டாக இருந்து வருவாரென்று தெரிகிறது.

---

## கிராமவாழ்க்கை.

[ராமசுப்ரமணிய நாவலர், பத்மநாபபுரம்.]

'கிராமம்' என்ற சொல்லின் பொருளை அறியாதார் யாருமிரார் எனவே நினைக்கின்றோம். 'கிராமம்' என்று சொல்லும்பொழுதாகிலும், கேட்கும்பொழுதாகிலும் நமக்குள் ஓர் உணர்ச்சி தோன்றுகின்றதல்லவா? அவ்வுணர்ச்சி எக்காரணத்தாற் பிறந்தது என்பதைப்பற்றி நீங்கள் சற்றே ஆராய்ந்து பார்ப்பீரேல் அது கிராம வாழ்க்கையின் ஆனந்தத்தாற் பிறந்தது என்று எளிதில் அறிந்துகொள்வீர்கள். கிராம வாழ்க்கையிலேதான் ஈசனது அறிகுறிகள் பலவும் பொலிந்து விளங்குகின்றன. ஆஸ்திக புத்தி கிராமவாழ்க்கையிற்றான் உண்டாக வேண்டியிருக்கிறது. இயற்கையின் அற்புதங்கள் கிராமங்களில் நடமாடுகின்றன. கிராமவாழ்க்கையைவிட மனத்திற்கு உற்சாகத்தையும், கடவுள் பக்தியையும் உண்டுசெய்வது மற்றொன்று மிலது என்றே கூறலாம். கிராமவாழ்க்கையின் சுகம் கிராமத்தில் வசிப்பவர்களைக்கேட்டால் நன்கு விளங்கும். அனுபவிகளன்றோ உண்மையை நன்றாய் அறியும் திறனுடையார்?

சர்வ வல்லமையுடையவனாகிய இறைவன் பிரகிருதிதேவியைச் சிருட்டிசெய்தான். அத்தேவியின் மூலமாகத் தனது அருளையும் நிலையையும் ஜீவர்கள் உணருமாறு செய்து சர்வ சாக்ஷியாய் வீற்றிருக்கின்றான். அறிவாளிகள் பிரகிருதியின்

கடவுளைக்கண்டு ஆனந்திக்கிறார்கள். இறைவனது திருவிளையாட்டுகளைக் கிராமத்திற்றான்கண்டு ஆனந்த வாரியில் முழுக வேண்டும். இயற்கையிலேதான் இறைவன் விளங்குவான்.

ஆனால் இயற்கையின் சொரூபமாகிய கிராமங்களை விரும்புவோரை உளந்திருப்தியடையும்வண்ணம் காணக்கூடவில்லை. நவீன நாகரீகச் செருக்குற்ற சிரோமணிகள் கிராமங்களை நகரங்களாக்கவும் முற்பட்டுவிடுகின்றனர். கிராமங்களைப் புறக்கணித்துவிட்டு நகரங்களையும், பட்டினங்களையும் நாடுகின்றவர்கள் எண்ணிறந்தோர். இத்தகையோர் நகரங்களையடைவது அவைகளிலுள்ள போலி நாகரீகத்தைக்கண்டு மயங்கியேதான் என்று யார்தான் கூறத்துணியார்கள்? மேல் தளுக்கைக்கண்டு மோகமுற்று விளையாட்டுச்சாமான்களை வாங்க முற்படும் குழந்தைகளையனையோரே இத்தகையோர். கிராமங்களின் மேன்மையும் கிராம வாழ்க்கையின் இன்பத்தையும் இவர்கள் அறியாதாராவர். இயற்கை யற்புதங்களை யறவே இல்லாதாக்கிச் செயற்கை விநோதங்களைப் புகுத்தி நகரம் என்று பெயர் புனைந்து உலகத்தை விகாரப்படுத்துவது அழகாமோ? நாகரீக முற்ற விடம் நகரம் என்ற பெயர்க்கிலக்காதல் முறைமை. ஆனால், தற்போதைய நகரங்களிலுள்ள மேன்மையும் நாகரீகமும் உண்மையானவையல்ல. போலி நாகரீகமே தலைவிரித்தாடுகின்றது. உண்மை நாகரீகமுடையோர் உண்மையான கடவுளையும் போலி நாகரீகமுடையோர் போலிக் கடவுளையுமே காண்பர். இயற்கையிற் கடவுளின் ஒளி மிகுதியாயும் செயற்கையில் மிகவும் குறைவாயுங் காணப்படுகின்றது. இயற்கை யற்புதங்களை வருணிப்பதால் மெய்யான பக்தியும் செயற்கை யற்புதங்களை வருணிப்பதால் நாஸ்திக புத்தியும் மேலிடுகின்றது உண்மையல்லவா? செயற்கை யற்புதங்களைக் காண்டல் மாத்திரத்தானே இறைவனை அவமதிப்பவரும், இறைவன் இல்லையென்பவரும், உலகமே மெய்யென்பவரும், உலகபோகங்களே விரும்பத்தக்கனவென்போரும் அனேகருளர் என்பது மறுக்கற் பாற்றன்று. செயற்கை யற்புதங்கள் அறிவாகிய கண்ணைக் குருடாக்கிவிடுகின்றது. நகரவாசம் கிராமவாழ்க்கையைவிட மிகுந்த சௌகரியத்தைக்

கொடுக்கின்றது என்று நம்பிக்கைவைத்துப் பல அறிவாளிகளும் மோசம் போகின்றனர். நகரவாசம் சிற்சில சௌகரியங்களைக் கொடுப்பதுண்டெனினும் அச்சௌகரியங்களின்றியே வாழ்க்கையை நடத்தல் கூடும். ஆடையும் உணவும் மாந்தர்க்கு முக்கியமாய் வேண்டியவைகளாகும். இவை கிராமங்களில் கிடையாவா? மற்றும் வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய யாவும் கிராமத்திற் கிடைத்தல் யாவரும் அறிந்த விடயம். புதியனவாய்க் கண்டுபிடிக்கப்பட்ட வஸ்துக்களுக்காக நகரங்களை நாடவேண்டுவதில்லை. ஏற்கனவே உளவான சௌகரியங்களைக் கொண்டு திருப்தியடையாமல் நாமே அவசியத்தை உண்டு பண்ணிக்கொள்கிறோம். ஆதலாற்றான் நகரத்தை நாடவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. அவசியத்தைக் குறைத்தால் சௌகரியம் தானே உண்டாகும்.

நகரங்கள் ஆடம்பரமான வாழ்க்கையை உண்டுபண்ணுவனவாயிருக்கின்றன. இவ்வாடம்பரவாழ்க்கையாற்றான் உண்மை ஞானம் மேலோங்காது போய்விடுகின்றது. உலக போகங்களையே நித்தனும் விரும்பியுழன்று அவமே மாள்கின்றனர் ஜீவர்கள். இறைவன் ஆடம்பரமான வாழ்க்கையை உடையவனா? சாத்வீக குணமுடைய ஈசனும் இராஜோ குண சம்பந்தமான ஆடம்பர வாழ்க்கையை நிகழ்த்துவனோ? ஆடம்பர வாழ்க்கை யிருக்குமட்டும் ஞானக்கண் திறவாது என்பது ஓர் அரிய உண்மையாகும். ஆடம்பர வாழ்க்கை இறைவனைக்காட்டாது மறைத்தலால் அதுவே மாயையுமாம். ஆதலின், உண்மை அறிவாளர் நகரத்தை விரும்பார்கள் என்பது திண்ணம்.

சாதாரணமாக நகரத்திலுள்ளோர் அகங்காரம், கோபம், மோகம் முதலிய தீங்குணவயப்பட்டிருப்பதைக் காண்கிறோம். இக்குணங்கள் தற்போதைய நகரவாசத்தின் பயனேயாம். சாத்வீக குணமுடையோர் நகரங்களில் சிறுபான்மையோராகவேயிருப்பார். அஃதேபோல கிராமங்களில் மேற்கூறிய அகங்காராதி தீக்குணங்களுடையோரும் சிறுபான்மையோராகவேயிருப்பர். இயற்கை யற்புதங்கள் மனத்திற்குச் சாந்தியை உண்டுபண்ணுதலின் இயற்கை நிலவும் கிராமங்களில் வதிவோர் பெரும்பான்மையோரும் சாந்தமுடையோராகவே இருப்பார்கள்.

(தொடரும்.)

# நாம் சித்தி அடைவதெப்படி?

:0:

(சுப்பிரமணிய தீக்ஷிதர்)

"வணக்கமுள்ள பேர்களுக்கு வாய்க்குமல்லால்
வாதாடித் திரிபவர்க்கு வருமோ சும்மா"

"வானநாயக வானவர் நாயக வணங்கூர்
ஞானநாயக நான்மறை நாயக நலஞ்சேர்
மோனநாயக நின்னடிக் கன்பின்றி—முற்றுந்
தீனநாயகம் வாடவோ வென் செய்வேன் செப்பாய்"

நமது பூர்வீக கிரந்தங்களைப்படிக்கும் ஒவ்வொருவருக்கும் நமது முன்னோர்களான மஹரிஷிகளின், பெருமை நன்குவிளங்கும். அம்மகான்கள் தங்களுடைய தபோ பலத்தால் செய்த ஒவ்வொரு காரியமும் மகா அற்புதமானது. அருமையும் பெருமையும் வாய்ந்த அத்தகைய ஆச்சர்யமான காரியங்களை செய்யவல்ல அம்மஹான்களின் மகிமையைக்கண்டு வியப்படையாதவர் யாவர்? என்றாலும், அவர்களுக்கு அவ்விதமான திவ்ய சக்தி எப்படி வந்தது? அதை அடைய அவர்கள் என்ன செய்தார்கள் என்று ஒருவரும் ஆலோசித்துப் பார்ப்பதே இல்லை.

பெளதிகம், லோகாயதம் முதலிய சாஸ்திரங்களின் ஜய பேரிகையின் முன்னால் வேதகோஷம் போன இடமே தெரியவில்லை. ஆகையால், நவ நாகரீகத்தின் ஆடம்பரங்களைக் கண்டு மதி மயங்கும் மனப்பான்மை ஜனங்களுக்குள் ஏற்பட்டுவிட்டது. மனிதன் சுகமாய் வாழ ஹேதுவான பல சுக சாதனங்களை அந்நாகரீகம் ஏற்படுத்தி இருக்கின்றது என்று அதில் ஈடுபட்டவர்கள் கூறுகின்றார்கள். அப்படி அவர்கள் கூறுவதில் சற்று உண்மையிருந்தாலும், வறுமை, பிணி, த்வேஷம், கிலேசம் முதலிய அனர்த்தங்களை ஒழிக்க அதற்கு சக்தி இல்லை என்று நன்றாய் ஆலோசித்துப்பார்க்கும் ஒவ்வொருவருக்கும் தெரியவரும். இந்நிலைமையில் சாந்தி ஏது? சாந்தி இல்லாதவிடத்தில் சுகமில்லவே யில்லை யென்று சொல்லத் தேவையில்லை.

"பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும்" என்று நாம் அல்லும் பகலும் பணப்பிசாசம் பிடித்து அலைகின்றோம். மஹரிஷிகளின் வம்சத்திற் பிறந்த நம்போன்றவர்களுக்கு இதுதான் தொழில்போலும்! மஹரிஷிகளோ வென்றால் தவத்தையே தனமாகக் கொண்டவர்கள்; ஆடம்பரமற்ற உயர்ந்த வாழ்க்கையோடுகூடியவர்கள். வைதிகம், லௌகீகம் என்னும் இரண்டு விதமான வித்தைகளிலும் பேர்போனவர்கள்; மஹா பக்தர்கள், அணிமாதி சித்திகளைப் படைத்தவர்கள். அம்மஹான்களுடைய வம்சத்திற் பிறந்த நம் அறியாமையை என்னென்று சொல்வது? உண்பது, உடுப்பது, உறங்குவது, தவமாய்த் தர்க்கந் தொடுப்பது முதலிய துர்க்குணங்களோடு கூடிய நாம் நம்மை மஹரிஷிகளின் வம்சத்திற் பிறந்தவர்களென்று அழைத்துக்கொள்ளும் பொழுது நமக்கு ஒருவிதமான அச்சம் உண்டாகவில்லையா? இந்நிலைமையில் நம் நடை உடை பாவனைகளைக் கண்டு இதரர்கள் எள்ளி நகைத்தால் ஆச்சரியப்படுவானேன்?

இவ்வுலகத்திற் பிறக்கும் ஒவ்வொருவனுக்கும் எவ்வளவோ ஆசையுண்டு. உலக சிருஷ்டியில் இருக்கும் விசித்ரமான நானாவித பதார்த்தங்களிடத்தில் அவன் விருப்பம் செல்லுகிறது. தான் எந்தெந்த பதார்த்தத்தை அடைய விரும்புகிறானோ, அதைப் பெற்றாலன்றி, அவன் சுகமுறுவதில்லை. அநேகமாய், அவன் தான் விரும்பிய பதார்த்தத்தை அடையாமலேயே அல்லல்படுவது சகஜமாயிருக்கிறது. அதனால் அவனுக்கு துக்கம் சித்தம் என்று சொல்லத் தேவையில்லை. இத்துக்கத்திலிருந்து விடுபட எவ்வளவு முயன்றாலும் முடியாதவனாய் அவதிப்படுகின்றான். இப்படிப் பரிதபிக்கும் ஜனங்களுக்கு உதவி செய்வோர் இல்லையாவென்று சற்று ஆராய்ந்துபார்ப்போம்.

ஜன சமூகத்தை நாம் அறிந்தவர்கள், அறியாதவர்கள், அறிந்தும் அறியாதவர்களென்று மூன்றுவிதமாய்ப் பிரிக்கலாம். அறிந்தவர்களோ மிகவும் சொற்பம். அவர்களாலேயே நமக்கு இவ்வளவாவது நன்மை கிடைக்கின்றது. அவர்களும் இல்லாதிருந்தால் இவ்வுலகமே நரகமென்பதில் சந்தேகமே யில்லை.

அறியாதவர்கள் செய்யும் தப்பிதத்தைக்காட்டிலும் அறிந்தும் அறியாதவர்கள் செய்யும் அக்கிரமம் பயங்கரமானதாயிருக்கின்றது. இவ்வனர்த்தங்களை யொழிக்க நம்மிடம் தயையுள்ள பெரியோர்கள் கிரந்தங்கள் எழுதி அவற்றின் மூலமாய் நாம் எவ்விதம் இம்மையிலும், மறுமையிலும் சுகமடையலாம் என்பதை எடுத்துக்காட்டியிருக்கின்றார்கள். ஆகையால் நாம் ஒவ்வொருவரும் நம் பூர்வீக கிரந்தங்களை வாசிப்பது மிகவும் அவசியம்.

எந்தப் பொருளையடைந்தால் சோகமும், மோகமும் ஒழியுமோ, எது நமக்கு சித்தியைத் தருமோ, எது நமக்கு அமிர்தம் அளிக்குமோ, இன்னும் எது நமக்கு திருப்தியை உண்டு செய்யுமோ, அதை அடைவதிலேயே, நாம் கண்ணுங் கருத்துமாய் இருக்கவேண்டுமென்று நம் சாஸ்திரம் கூறும். ஷட்குண பரிபூரணனும், அனந்த கலியாண குணங்களோடு கூடியவனும் சகல அண்டங்களையும் படைத்து, அளித்து, அழிக்க வல்லவனுமுள்ள சர்வேஸ்வரனுடைய திவ்யமான திருவடிகளையே நாம் தஞ்சமாகக் கொள்ளவேண்டுமென்றும் அவை போதிக்கும். அவனை அடைய கர்மம், ஞானம், பக்தி, யோகம் முதலிய பல மார்க்கங்கள் உண்டு. எந்த மார்க்கத்தை அநுசரித்தாலும், எல்லாவற்றிற்கும் பொதுவாய் கவனிக்கவேண்டிய முக்யமான சில விஷயங்கள் உண்டு. அவைகளை நன்றாய் அறிந்து அதன்படி நடந்தொழுகினால் தான் கர்மமும், ஞானமும், பக்தியும், யோகமும் சித்திக்கும். இவைகளை நன்றாய் அறிந்து அதன்படி நடந்து வந்ததால் தான் நமது முன்னோர்களான மஹரிஷிகள் எல்லா உலகமும் கொண்டாடும்படியான பெருமையை யடைந்தார்கள்.

சுவரில்லாமலேயே சித்திரம் எழுதுவதில் நாம் மிகவும் சமர்த்தர்கள். முக்யமான விஷயங்களை காற்றில் பஞ்சாய்ப் பறக்கவிட்டு, அமுக்யமான விஷயங்களை பிறமாதமாய் வளர்த்திக்கொண்டு அவதிப்படுகின்றோம். மஹரிஷிகளின் சக்தி எங்கே? நாம் எங்கே? நம்மையும் நாம் பக்தர்களென்று கூசாமல் சொல்லிக்கொள்ளுகின்றோம்! நாம் செய்யும் ஜபமோ,

தபமோ, யோகமோ, யாகமோ, எதுசெய்தாலும், அதற்கு உடலுக்கு உயிர்போல் முக்யமானதாயுள்ளது யமமும் நியமமு முந்தான். யமமும், நியமமும் இல்லாத எந்தக் காரியமும் பலனையளிக்காது. இது சத்தியம்.

பரஹிம்சை முதலிய துர்க்குணங்களிலிருந்து நம்மை விடுவிப்பது எதுவோ அதற்கு யமம் என்று பெயர். அஹிம்சை, சத்தியம், அஸ்தேயம், பிரம்ஹசரியம், அபரிக்ரஹம் என்னும் இவ்வைந்தும் யமம் என்பதில் அடங்கும். மனோவாக்கு காயங்களால் யாதொரு பிராணிக்கும், எக்காலத்திலும், தீங்கிழைக்காமலிருப்பதற்கு அஹிம்சை என்று பெயர். எக்காலத்தும் உண்மையே பேசுவதை சத்யம் என்றும் இதரர்களுடைய சொத்தை அபஹரிக்காமலிருத்தற்கு அஸ்தேயம் என்றும், காமஜயத்தை பிரஹ்மசரியம் என்றும், பிராண தாரணைக்கு எவ்வளவு தேவையோ அதைவிடுத்து அதற்குப்புறம்பான அநாவசியமான இதர தேவைகளை வைத்துக்கொள்ளாமலிருப்பதற்கு அபரிக்ரஹம் என்றும் பெயர்.

ஜன்மத்தைத் தரும் பாபகர்மங்களிலிருந்து நம்மை விடுவித்து, விடுபெறச்செய்யும் நிஷ்காம தர்மத்தில் நிலைக்கும்படி செய்வது எதுவோ அதற்கு நியமம் எனப் பெயர். சௌசம், சந்தோஷம், தவம், ஸ்வாத்யாயம், ஈஸ்வர ப்ராணிதானம் என்பன நியமத்திலடங்கும். சௌசம் இரண்டுவகைப்படும்; ஜலம், மண் முதலியவற்றால் செய்துகொள்ளப்படும் பாஹ்ய சுத்தியும்; அசுத்த எண்ணங்களைத் தொலைத்து சதா நல் எண்ணங்களைக் கொள்வதாகிய அந்தஸ்ஸுத்தியும் மிகவும் முக்யமானவை. எது நமக்குக் கிடைக்கிறதோ அதில் திருப்தி கொள்வதற்கு சந்தோஷம் என்று பெயர். சாஸ்திரங்களில் கூறப்பட்ட 'க்ருச்சரம்' 'சாந்திராயனம்' 'ஏகாதசி' முதலிய வ்ரதானுஷ்டானங்களைத் தவம் என்றும், வேதமோதல், ஜபம், ஈஸ்வர நாமோச்சாரணம் முதலியவைகளை செய்வதற்கு 'ஸ்வாத்யாயம்' என்றும்; தெரிந்தோ, தெரியாமலோ தான் செய்யும் கர்மங்களை யாதொரு பலாபேக்ஷையின்றி ஈஸ்வரார்ப்பணம் செய்வதை 'ஈஸ்வரப்ராணிதானம்' என்றும் சாஸ்திரம் கூறும்.

யம நியமங்களை சாஸ்திரம் போதிக்கும் வண்ணம் அநுஷ்டித்தால் துக்கமும், மோகமும், உலகத்தைவிட்டு ஓடும். நரகம் போலிருக்கும் இவ்வுலகமே சொர்க்கமாகிவிடும். பதஞ்சலி மஹரிஷியால் எழுதப்பட்ட யோக சாஸ்திரத்தில் யம நியமத்தை உண்மையில் அனுஷ்டிப்பவர்களுக்கு உண்டாகும்படியான சித்தியைப்பற்றி விரிவாய் எழுதப்பட்டிருக்கிறது. தபோதனர்களின் ஆச்ரமத்தில் பசுவும் புலியும் ஒரே துறையில் நீர் அருந்தும் என்றால் அது அவர்கள் அநுஷ்டித்து வந்த அஹிம்சா விரதத்தின் மஹிமையைக்காட்டுகின்றது. அவர்களுடைய சாபானுக்கிரஹ சக்தி அவர்களுடைய சத்திய வாக்கைக் காட்டுகின்றது. அவர்கள் உலகத்தைத் திரணமாய் மதித்து வெறுத்திருந்த காரணத்தால், அஷ்ட லக்ஷ்மியும் வசியமாயிருந்தது. அவர்களை தரிசித்தபேர்களும், அவர்களிடமிருந்து உபதேசம்பெற்றவர்களும் ஜன்ம சாபல்யமடைந்தார்களென்றால் அது அவர்களுடைய பிரம்ஹசரிய விரதத்தின் மகிமையைக் காட்டுகின்றது. இப்படியே அவர்களிடம் காணப்படும் ஒவ்வொரு அற்புத சக்தியும், அவர்கள் அநுஷ்டிக்கும் தவத்திலிருந்தே வந்ததென்று தெரியவரும். சர்வேஸ்வரனிடம் பக்திபூண்டு யம நியமத்தோடு கூடி செய்யப்படும் தவம் இவ்வளவு சித்தியைத் தருமானால் நாம் ஏன் அவ்விதம் செய்யக்கூடாது. அறியாமையினாலோ, அல்லது உபேக்ஷயினாலோ, இதுவரையிலும் இவ்வளவு முக்யமான யம நியமங்களை அநுஷ்டிக்காமலேயே விட்டு விட்டோம். அதனால் நாம் துக்க சாகரத்தில் ஆழ்ந்து தத்தளித்துக்கொண்டிருக்கிறோம். ஆகையால் ஆனந்தம் விரும்பும் ஒவ்வொருவரும் சர்வேஸ்வரனிடம் அளவிலா அன்பு பூண்டு யம நியமத்தோடு கூடி பக்திசெய்து வந்தால் நம் மனோரதம்நிறைவேறும் என்பதில் சந்தேகமே இல்லை.

“ அத்தி முகனடி நித்த நினைபவர்
சித்தித் திருவொடு முத்தி பெறுவரே ”

# அஜாதசத்ரு பௌத்தருதல்.

[ஆர். நாகராஜராவ் பி. ஏ. எல். டி., உதவி உபாத்தியாயர்,
லண்டன் மிஷன் ஹைஸ்கூல், சேலம்.]

ஒரு நாள் இரவு சுமார் ஏழுமணிக்கு அரண்மனையின் மேல்தட்டில், மகாராஜாவாகிய அஜாதசத்ருவும் அவருடைய மந்திரிகளும் நண்பர்களும் கூடிப் பேசிக்கொண்டிருந்தார்கள். சந்திரன் ஆகாயத்தில் பூரணகலைகளுடன் கூடிக் குளிர்ந்த கிரணங்களை வீசி அத்தோற்றத்தை மிகவும் உல்லாசமளிக்கும்படியாகச்செய்தான். அத்தருணம், வாலிபதசையுள்ளவர்களான சில மந்திரிகளைப்பார்த்து அஜாதசத்ரு, 'நண்பர்களே! என்ன அழகான சந்திரன்! என்ன உல்லாசமான காக்ஷி! என்ன நிலா! இவ்விதமான காலத்தில் நாமென்ன செய்தால் நம்மனது குதூஹலமடையும்?' என்றார். இதைக்கேட்டவுடன் ஒரு மந்திரி, மகாராஜாவே! நீரோ சகலவித பராக்கிரமத்தையுமுடையவர்களாயிருக்கிறீர்! ஆகையினால் இப்போதே சதுர்வித சேனையுடன் புறப்பட்டு வேற்றரசனுடன் போர்புரிந்து வெற்றிக்கொடியுடன் வீடுதிரும்பி வருவதற்கேற்றதாகயிருக்கிறது என்றான். மற்றொருவன், 'மன்ன! நீர் சகலவித ஐஸ்வரியங்களையுமடைந்திருக்கிறீர். மண், பெண், பொன் என்ற இவற்றை இப்போது அநுபவிப்பதற்குகந்த கால' மென்றான். இம்மந்திரியே, ஏனையோரும், தத்தம் மனப்போக்கின்படி சொல்லத் தொடங்கினர்கள். ஆனல் அஜாதசத்ரு, அக்கருத்துக்களால் சந்துஷ்டியடையாமல், மௌனமாக வீற்றிருந்த ஜீவகர் என்னும் ஆஸ்தான வைத்தியரைக்கேட்க, அவர், 'ஐய, நீர் என்னையுமொரு பொருட்டாக எண்ணிக் கேட்பதற்கு வெகு சந்தோஷமடைகிறேன். நான் சொல்வது உமக்கிஷ்டந்தாராவிட்டாலும் நீர் கேட்டபின் சொல்லாமலிருப்பது தகாது. என்னுடைய மாந்தோப்பில் ஒரு பிரசித்திபெற்ற முனிபுங்கவர் வசித்துவருகிறார். அவர் மகாதபஸ்வி. முதிர்ந்த வயதினரன்று. அவர் முகமண்டலம் உத்தமதேஜஸினல் பிரகாசிக்கப்பெற்றிருக்கிறது. இத்தருணம், அவரைப் பேடி கண்டு

வருவோமாகில், இக்காலத்தை நாம் நல்வழியில் செலவிடுவதாகு மென்றார். இதைக்கேட்டபின், அஜாதசத்ரு தன் சகாக்களைக் குறித்து, 'மந்திரிமார்களே! அவ்விதமே செய்யலாம். நானும் என் தந்தையார், இத்தபஸ்வியைப்பற்றிக் கூறக் கேட்டிருக் கிறேன்! அங்குச் செல்லவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள்' என்று கூறினார். உடனே, அக்கூட்டம் கலைந்தது.

ஒருமணி நேரத்தில், ராஜகிருகத்தின் அகன்ற வீதிகளில் அஜாதசத்ருவும், மந்திரிகளும் நண்பர்களுமுள்பட மற்ற அரண் மனை ஸ்திரீகள் சஹிதம் ஊர்வலமாகச் சென்றார்கள். ராஜா வானவர், பட்டத்து யானையின்பேரில், அழகான அம்பாரியிற் பிரயாணமானார். இருபுறமும் அவருடைய சகாக்கள் சூழ்ந்து சென்றார்கள். நிலாவில், தீவட்டிகள் தகதகவென்று ஜ்வலித்தன. ஜீவகருக்குச் சொந்தமாகவுள்ள மாந்தோப்புக்கு அருகில் வந்த வுடன், எல்லாரும் தம் தம் வாகனங்களிலிருந்து இறங்கி, ராஜா வும் ஜீவகரும் முன்செல்ல, மற்றவர்கள் பின்தொடர, அம்மாந் தோப்புக்குள் புகுந்தனர். எங்கும் நிசப்தமாயிருந்தது. ராஜாவுக்கு உடனே ஒரு திகிலேற்பட்டது. 'என்ன ஜீவகரே! நீர் என் பரிஜனங்களிடமிருந்து என்னைப்பிரித்து இவ்வளவு தூரமழைத்துவந்ததன் காரணம் என்ன! மாந்தோப்பிலிருந்து ஒருவிதமான சப்தமும் காணப்படவில்லையே! நீங்கள் கூறுகிற மாதிரி, ஆயிரக்கணக்கான பிக்ஷுக்கள் இதுசமயம் அங்கேயிருப் பார்களானால், எத்தனை குரல்கள் கேட்கப்பட்டிருக்கவேண்டும்!" என்றார். ஆனால் மௌனமாக, ஜீவகர், ராஜா கூறுவதைக் கவனி யாது, அத்தோப்புக்குள் புகுந்து, அங்குள்ள பெரிய கூடாரத் திற்குள் சென்றார்.

ஒரு அகன்ற கட்டடத்தின் ஒரு கோடியில், புத்தபிரான், பத்மாஸனத்தில் வீற்றிருக்கவும், சிஷ்யர்களாகிய பிக்ஷுக்கள், தங்களுடைய காஷாய வேஷத்துடன் கும்பல் கும்பலாக வீற் றிருக்கவும் கண்டார். அஜாதசத்ரு ஒருமுறை அவருடைய தேஜஸுடைய முகத்தைக்கண்ட, ராஜாவின் கண்கள், அதனிட மிருந்து அவற்றைத் திருப்ப முடியவில்லை. அப்போது, புத்தபிரா ன் பேசிக்கொண்டிருந்ததால், அமிர்த சமானமான (தொடரும்)

# பாலபருவமும் அதன் பராமரிப்பும்.

**[By Dr. S. R. A. Challan, F. I. A. Sc., Assistant Surgeon, Dharmapuri.]**

(119-வது பக்கத்தின் தொடர்ச்சி)

குழந்தைகளைச் சதா தூக்கிக்கொண்டும், பலவிதமாகக் கொஞ்சிக்கொண்டும், குழந்தைகளின் சமநிலையான வளர்ச்சியை பெற்றோர்களே கெடுத்துவிடுகிறார்கள். குழந்தைகளிடம் அதிக பக்ஷமாயிருக்கவேண்டுமென்ற தப்பெண்ணத்தால் பெற்றோர் குழந்தைகளை அநியாயமாய்க் கெடுத்துவிடுகின்றனர். ஒரு குழந்தையைப் பார்த்தமாத்திரத்திலேயே அது எவ்வளவு தூரம் கைக்குக்கை மாற்றி மாற்றி எடுக்கப்பட்டும், மடியில் தவழ்ந்தும், வளர்ந்திருக்கிறதென்பதை தெரிந்துகொள்ளலாம். இத்தகைய செல்லப் பூச்சிகளில் இருவகையுண்டு. ஒன்று சம்பள ஆட்களால் சுமக்கப்பட்டவை, இரண்டாவது குடும்பத்தின் கடைசிக் குழந்தையாயிருப்பவை. (கடைக்குட்டி என்று ப்ரீதியாய் பெரிதாயும் அழைக்கப்படுபவை.)

ஏதாவது சம்சயம்கொண்டு வழியிற் போகிறவர்களையெல்லாம் அழைத்துக் குழந்தையைப்பார்க்கச் சொல்லி அவரவர் சொன்னபடி வியாதி ஏதாவது இருக்கிறதோவென்று நினைத்து பலவித வைத்தியம் தாமாகவே செய்வதும் 'வைத்தியன்' என்றழைக்கத் தகுந்த யாதொரு யோக்கியதாம்சமுமில்லாதவர்களையும் குழந்தைகளுக்கு மருந்து கொடுக்கச்செய்வதும் ஆகிய இக் குருட்டுச் செய்கைகள் நம்மில் சின்நாட்களாக ஓர் கொடியவழக்கமாகி குழந்தைகளை மீளாப்பிணியாளிகளாக்கியும் வருகின்றனர்.

சிலர் வைத்தியரை நாடாதிருக்குமாறு தாமே சிற்சில மருந்துகளை (ஆயுர்வேத முறைப்படி யல்லாது) தயார்செய்து ஓர் சிறு பெட்டியிலாவது பையிலாவது வைத்துக்கொண்டு தோன்றுமாறெல்லாம் உபயோகித்துக்கொள்கின்றனர். இப்படிச்செய்வதால் அநியாயமாய்க் குழந்தைகளைக் கெடுத்துவிடுகிறார்களொ

ன்பது என்னுடைய சொற்ப அனுபவத்தின் உண்மையான அபிப்ராயம். தம் சொந்த மருந்தையாவது வேறு மருந்தையாவது உபயோகித்தால் வியாதி நீங்கிவிடுமென்றும் இக்காலத்து வைத்தியர்களுக்குக் கொடுக்க நேரிடும் பணமும் (Doctor's Bill) மிகுத்திக்கொள்ளலாம் எனவும் அநேகர் தவராக நினைக்கிறார்கள். ஏனென்றால் சில சமயம் அசௌக்கியமாயிருந்தால் சற்றுநேரங் கழித்து தானே சௌஸ்தமாகிறது இயற்கை. இத்தகைய சந்தர்ப்பத்தில் மேற்சொன்னவாறு ஏதாவது உப சாந்தியும் செய்யப்பட்டிருந்தால் நம்பிக்கை தானே ஏற்படுகிறது. ஆனல் இம்மாதிரி அஜாக்ரதையாயிருந்து பின்பு கடினமான வியாதி ஏதாவது ஊன்றிவிட்டால் என்ன செய்வது? தானாக பலமடையக்கூடாத வியாதியும் மேற்குறித்த உபசாந்தி மருந்துகளின் பிரயோகத்தால் நல்ல பலம் பெறும். தேற்சிபெற்ற வைத்தியரை யடைந்தால் வியாதியை ஆரம்பத்திலேயே சரிவர அறிந்து தகுந்த சிகிச்சைசெய்து சௌக்யப்படுத்துவார். தாய்மார்கள் அஜாக்கிரதையால், குழந்தைகளுக்கு ஜுரம், மலச்சழிச்சல், முதலிய பலவியாதிகள் உண்டாக இடங்கொடுக்கின்றனர். ஜுரத்தை மருந்துகொடுத்தும் ஏற்ற ஆகாரங் கொடுத்தும் துவக்கத்தில் நிறுத்திவிடலாம்.

அசௌக்ய குடும்பங்கள் :—விசேஷமாக நம் நாட்டு தனவந்தர்களில் அசௌக்யமான குடும்பங்களிருப்பதாக நான் நினைக்கிறேன். குறைவென்பதை யறியாத கிராமத்திலிருக்கும் ஓர் எளியவன் நல்ல ஆகாரமில்லாமற்போனலும், பணக்காரரைவிட (நூறுமடங்கு) திடகாத்திரமாயும், சௌக்யமாயும், சந்தோஷமாயுமிருக்கிறன். இதன் காரணம் என்னவென்று எனக்குத் தோன்றுகிறதெனின், தமிழ் இங்கிலீஷில் அரை குறையாய்ப் படிப்புள்ள பணக்காரர்கள் தாமே சிகிச்சை முறைகளை யறிந்துகொள்ள சில புத்தகங்கள், மருந்து விளம்பரங்கள் முதலியவைகளை அடிக்கடி பார்ப்பதால் தாமே சொந்தத்தில் சில மருந்துகளை வருவித்தும் தயார்செய்தும் வைத்துக்கொண்டு கையாளவாரம்பிக்கின்றனர், ஆனல் எளிய கிராமவாசிகளோ,

இவ்வித ஏற்பாடுசெய்ய அறியாதும் முடியாதும் பயந்தவர்களாதலால் அங்கு மிங்கும் அலைந்தாவது வியாதி வந்த காலத்து வைத்தியர் உதவியை அடைந்து தகுந்த சிகிச்சையடைகிறார்கள். ஏழைக் கிராமக்குடிகளின் குழந்தைகள் நாம் முதலில் குறித்த சிறு தீனிகள் கிடைக்கப்பெறாது வேளாவேளை ஒரு வழிப்பட்ட ஆகாரத்தையே உட்கொள்வதால் நன்மையுடைகின்றனர்.

செல்லங் கொடுக்கப்பட்ட குழந்தைகள் அதிக நடமாட்டமில்லாது, அபரிமித உண்டி, முதலிய பராமரிப்புகளாலும், இராக்காலங்களில் சதுர்கச்சேரி, விருந்து, பாட்டுக்கச்சேரி டிராமா முதலியனவைகளைப் பார்க்கப் பழகி தூக்கமும் கெட்டு தேக திடம் குறைய நேருகிறது.

குழந்தைகள் தாராளமாய் ஓடியாடல்வேண்டும். பட்டு, ப்ளானல் ஆடைகளால் கால் முதல் தலைவரை அலங்கரிக்கப் பட்டும், உட்காரவும் அழகாக நடக்கவும் படுக்கவும் மட்டும், பழகிய செல்வவந்தர் குழந்தையுடன் யதேச்சையாய் இயற்கை வளர்ச்சிபெற்ற சாமானியர்களின் குழந்தைகளை ஒத்திட்டுப் பாருங்கள். அதிகமாய் விஸ்தரித்தல் வேண்டுவதில்லை.

செல்லங்காட்டுவதை யொழித்து, குழந்தைகளுக்கு நிதானமாய் இயற்கையை யனுசரித்து, எவ்வித சீதோஷ்ண நிலைமையையும் நிர்வகிக்கக் கூடியதாய், சுகாதார விதிப்படி வளரச் செய்வது பெற்றோர்களாகிய நமது கடமை.

---

S. A. நரசிம்மய்யரால் ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது.

---

# நமது பண்டைநாள்.

[D. A. குருநாதன், தர்மபுரி.]

நிலமகளின் திருமுகம் போல பொலிவுரும் நம் தாய்நாடா மிப் பாரதகண்டம், முன் ஒருகாலத்தில் உலகத்துக்கே மேல்விரி சட்டம்போன்று இருந்ததன்றோ? அந்நாட்களில் நம்மிந்திய தேயத்தின் வளப்பத்தையும் தற்கால வளப்பத்தையும் நினைக்குந் தோறும் நினைக்குந்தோறும் எந்த ஒரு பாரத புத்திரனும் மனம் வாடாமலிரான்.

முக்கியமாய் மூவேந்தர்காலத்தே நம் தென்னாடு எல்லா வளங்களும் ஒருமிக்கப் பெற்று கலைமகளின் உறைவிடமாயும், வணிபம், கைத்தொழில், விவசாயம் முதலியவைகளில் முதன்மைபெற்று விளங்கியது. நம் நாடு, தன்னகத்தே கிடைக்கக் கூடிய இயற்கைப் பொருள்களை உரோமாபுரி முதலிய அன்னிய நாடுகளில் பரப்பிவந்தது. நம் மூதாதையர்கள் தம்மை ஒத்த கல்வி, ஞானம், கைத்தொழில், நாகரீகம், செல்வம், வீரம் வாய்ந்தவர்கள் எங்ஙனுமில்லை என்று இருமாந்திருந்தனர். (அந்தோ! அவர்கள் தங்கள் சந்ததியார் பிற்காலத்தில் அந்நியரால் ஆளப்படுவார்களென்றும் கல்வி அறிவு குன்றி, கைத்தொழில் விவசாயங்கள் அழிவுற்று, கேவலமான ஒரு சிறு பொருளுக்கும் அந்நியநாட்டுச் சாமான்களை எதிர்பார்ப்பார்களென்று கனவிலும் எண்ணியிரார்) நம்மிலக்கியங்கள் இன்றளவும் தேனினும் இனிய சுவையுடன் பொலிந்துவிளங்குகிறதன்றோ? நம் நாட்டு வணிபப்பொருள்கள் செல்லாத இடங்களில்லை. தற்காலம் நாகரீகத்திற்கே முதன்மைபெற்றவர்களென்று சொல்லப்படுகிற மேநாட்டினர் இதுவரையிலும் கண்டறியாத கைத்தொழில் முறைகளையும் கலைஞானங்களையும் கண்டறிந்திருந்தனர். நம் வேந்தர்களால் ஆங்காங்கு பல்கலை கழகங்களை நிறுவி இருந்தனர்.

ஆங்கிலேயர்கள் நம் நாட்டுக்கு அடியெடுத்து வைக்கு முன்னரே நம்மவர்கள் கப்பல் கட்டும் வகையில் மிகவும் தேர்ச்சிபெற்றிருந்தனர். பிறதேயங்களில் நம் நாட்டு வணிபத்தை நடாத்த கடல் மூலமாகவும் கரைவழி மூலமாகவும் செல்ல கப்பல் முதலிய வாகனாதிகளைச் செய்திருந்தனர். இத்துணை சௌகரியங்களிருந்தமையாற்றான், பாபிலோனியா, எகிப்த், கிரீஸ், அரேபியா, ஆப்ரிக்கா, ரோம் முதலிய நாடுகளுக்கு கப்பல் மூலியமாயும் துருக்கி, சைனா, பாரசீகம் முதலிய நாடுகளுக்கு கரைவழியாகவும் வியாபாரம் செய்துவந்தனர்.

நிற்க; நம்முதாதையர்கள் கப்பல் கட்டும் தொழிலில் தேர்ந்தவர்கள் என்பதைக் குறித்து ஸ்ரீமான் பண்டிதர் முகர்ஜி முதலிய பல ஆராய்ச்சிக்காரர்கள் எழுதியிருக்கும் நூல்களினின்றும் சில ஆதாரங்களை ஈண்டு குறிப்பிடுவோம்:—

பண்டித முகர்ஜி அவர்கள் தமது "பூர்வீக இந்தியர்களின் கப்பற்றொழில்" என்னும் நூலில் "டேரியசும், அலக்ஜாண்டரும் தங்கள் நாடுகளுக்காக இந்தியாவில் நூற்றுக்கணக்கான கப்பல்களை கட்டுவித்தார்கள்" என்றும், ரோமாபுரியின் ஆசிரியர் ஒருவர் "இந்தியக்கப்பல்கள் கி. பி. முதல் நூற்றாண்டில், 2700 கன அடிகள் கொள்ளும்படியான பெரிய மாக்கலங்களாக இருந்தன" வென்றும் அக்காலத்தில் ஐரோப்பாவிலிருந்து அமெரிக்காவுக்கு 2000 கன அடி கொண்ட சிறு மாக்கலங்கள் தான் அனுப்பப்பட்டிருக்கின்றனவென்றும் இந்தியக் கப்பல்கள் ஆங்கிலேயக் கப்பல்களுடன் தேம்ஸ்நதியில் பிரயாணம்செய்ததாக மிஸ்டர் டிக்பி (Digby) என்பவர் கூறுகிறார். இதுவும்தவிர ராமாயணகாலத்திலேயே குகன் ஸ்ரீ ராம லக்ஷ்மணர்களை படகின் மூலியமாய் சங்காநதியைக் கடக்கச்செய்ததாயும் சொல்லப்பட்டிருக்கிறது. சிலப்பதிகாரத்தில் கோவலனுடைய தந்தை கப்பல் வியாபாரி என்றும் அக்காலத்தில் காவேரிப்பூம்பட்டினத்தில் "கலம் கரை விளக்கம்" (Light House) கட்டப்பட்டிருந்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இதுவும்தவிற மநுவின் காலத்திலேயே கப்பலோட்டிகள் (மாலுமிகள்) இருந்ததாயும் மநுஸ்மிருதியிலேயே கப்பல் கட்டும் தொழில் சொல்லப்பட்டிருப்பதாயும் மிஸ்டர். ஸர்வில்லியம் ஜேம்ஸ் குறிப்பிட்டிருக்கிறார்.

ஜீவிக சிந்தாமணியில் மயில் ஏறியும் போஜப்பிரபந்தத்தில் ஆகாயத்திலும் தரையிலும் மணி ஒன்றுக்கு சுமார் 45 மைல் வீதம் போகக்கூடிய குதிரைபோன்ற யந்திரம்ஒன்றும் யாதோர் உதவியுமின்றி ஆடக்கூடிய விசிறி ஒன்று இருந்ததாகவும் சொல்லப்படுகிறது. இவைகளினால் தற்காலத்திலுள்ள மோட்டார், ஆகாயவிமானம், எலக்ட்ரிக் விசிறி, முதலியவைகளின் குறிப்புகள் காணப்படுகிறதல்லவா? இன்னும் நம்முன்னோர்களின் பிற நாகரீகங்களைக் குறித்து அடுத்த சஞ்சிகையில் வரைவோம்.

(இன்னும் வரும்.)

---

## உண்டியின் தூய்மை.

[Dr. C. R. Venkatnarayanan, L. M. & S.]

'பரோபகாரார்த்தம் சரீர சம்ரக்ஷணம்' எனும் வடமொழி வாக்கும் 'செவிக்கின்ற பின் சற்று வயிற்றிற்கு மீயப்படும்' எனும் திருக்குறள்பொருளும் சற்று ஆராயுமிடத்து நாம் உண்ண வாழாது, வாழ உண்ணும் உணவு உயிர்வாழ முக்கிய சார்புடைத்தாதல்பற்றி ஈங்கு அதன் தூய்மை ஊன்றி நோக்கல் தகும்.

இரத்த ஓட்டம், மூச்சு உட்கொளல், வெளிவிடல் இச்சை, நினைப்பு, சொல், செயல் ஏனைய நம் உடலில் தொழில்கள் இடைவிடாதும் விட்டும் நடந்தேற சிலவு பொருள் சரிகட்டவும், அவ்வுடல் வளர்ப்புக்கும், ஏற்ற உணவு இன்றியமையாதன. இத்தகைய உணவு ஏதேனுமொன்றின் தூய்மை குன்றிடில் அவ்வுணவு வெறுப்பு முதல் உடற்குருக்கம் ஈரான வியாதி பல பற்றும், பற்றயிடமுண்டாம்; சுகம் குன்றிடும். ஆகையால் நம் உடல் உறுப்பு தொழில் அறிந்து உணவுக்கேற்ற பொருள் தூய்மை ஆராய்ந்து, அவை சேகரிப்பு, கலவை, அடிசில் பக்குவம், புசிப்பு, தூய்மை பெறும் விதிகள் நன்கு அறிதல் வேண்டும்.

உடல் உறுப்புகள் அவ்வவற்றின் தொழில் தேர்ந்தறிவிக்கும் நூல் பயின்றோர் நமக்கான கன உணவுப்பொருள்களான தசையுண்டாக்குவன, கொழுப்பு சேர்ப்பன, சூடுண்டாக்குவன, பின்னும் பல கருவிகளுக்குத் தேவையான உப்புவகைகளெனும் 4 முக்கிய பிரிவுகள் கூறிட்டுள்ளார். இவை ஸ்தாவர ஜங்கம, ஜீவராசிவர்க்கங்களில் காணப்படும். ஸ்தாவர ஜீவராசிகளில் முதல் மூன்றும், ஜங்கமத்தில் நான்காவதும் பெறுகிறோம். ஸ்தாவரங்களில் உற்பத்தியாவன, நெல், கோதுமை, கேழ்வரகு, சோளம், கம்பு, துவரை, கடலை, பயிறு, உளுந்து, எள், மணிலா, தேங்காய் முதலியன சில. உப்பு சமுத்திரத்தினின்றும், சுரங்கங்களினின்றும் எடுக்கப்படும். மற்றும், முதற் கூறிய பதார்த்தங்களிலும் கொஞ்சம் கொஞ்சம் பெறலாகும். ஜீவராசிகளினின்று பெறுவன—பால், இறைச்சி, முட்டை முதலியவை. முற்கூறிய பொருள்கள் எளிதில் ஜீர்ணமாகும். ஆனால் அதி சீக்கிரத்தில் கெட்டுப்போம். ஸ்தாவரத்தில் வரும் பொருள், வளரும் இடம், எரு, பாய்ச்சும் நீர், பரிசுத்தமாயிருத்தல்வேண்டும். அவை சரியான காலத்தில் விளைந்து அறுவடையாய், பரிசுத்தமாய் சேகரித்து, அடிக்கடி வெயிலில் உலர்த்தி, காற்று ஈரங்களால் கெடாது பாதுகாத்து உண்ணலாகும். அவை உணவுக்கேற்க அறுவடையாய் ஆறுமாதகாலக் கழிவு தேவை. ஜீவராசிகளிலிருந்து பெறும் பொருள் 24 மணிக்குள் கெட்டுப்போம். அவ்வாறு கெடாது வைப்பது வெகு கஷ்டம். பணச்செலவு. மேலும் பொருள்கள் எவையும் சேகரித்தபின் அதிக காலமாய்விட்டால் அவை புஷ்டிகுன்றி சில சமயங்களில் வியாதிக்குக் காரணமாம். இத்தகைய பொருள்கள் அகப்படாத காலங்களில் அவை நமக்குத் தேவையாயின் அவற்றைக்கெடாது காப்பாற்றிவைக்க சுகாதார முறைகள் ஏற்பட்டுள. அப்பேர்க்கொத்த பொருள்கள், குணம், நலம், பார்வை, மணம், தொட்டுப்பார்த்தல் இவைகளால் அறிதல்வேண்டும். மேலும் அவைகள் அடங்கும் பாத்திரங்கள் துருப்பிடித்தும் சமனிலாது ஒரிடத்தில் பருத்தும் மற்றோரிடத்தில் தாழ்ந்தும் சிலவிடத்து தளையிட்டுக்கொண்டும் விரலால் அடிக்க சப்தம் குன்றி பொள் பொள்ளென ஒலிக்கும். முத்திரை உடைந்தும்

மேலொட்டிய குறிப்பு சீட்டு அழுக்குபடிந்தும் கிழிந்தும் இருக்கும். இவை விலக்கப்படுவனவேயாம். பின்னும் உணவுப் பொருள் தூய்மை முதலியன குன்றினவாய சந்தேகம் தோன்றுமிடத்து இவை எளிதில் நன்கறியும் உணவு பரிசோதிக்கும் (Food Inspector) துரைத்தனத்தார்களுக்குத் தெரிவித்து அவை நன்மை தீமை பரிசோதிக்கவேண்டல் வேண்டும்.

மேற்கூறிய நான்கு ரசமும் பொருந்திய பதார்த்தங்கள் பல உளவாயினும் ஒவ்வொரு ரசமும் நம் உடலுக்கு வேண்டிய அளவு ஒரே பதார்த்தத்தில் கூடி, தாய் பசு பால் தவிர ஒன்றிலும் அமைந்து காணாமையால் சம ரசம் பெற பல உணவு பொருள்கள் கூட்டல் வேண்டும். இவையும் உடலுக்கொத்தவும் புசிப்புக்குத் தக்கதும் எளிதில் கிடைக்கக்கூடியதும் சிலவே. ஆகையால் இத்தகைய பொருளின் தூய்மையே எங்கண் கவனித்தற்பாலது. தாயினன்புக் கடுத்தது இவ்வுலகில் காணோமதல்போல் தாய்ப்பாலுக்கடுத்த உணவு அவ்வம்மைக்குழவிக்கு எங்கும் கிடைப்பதரிது. அப்பால் கிடைக்காதபோது அடக்கமே உருவெடுத்தாங்கு குணத்தில் 'பசு' எனும் பழமொழியாய் விளங்கும் பசுவின்பால் தாய்ப்பாலுக்கடுத்ததாகும். அப்பாலும் சாஸ்திரவிதியில் உருசிகரமான தோழத்தில் நல் உணவு பெரும் சௌக்கியமான பசுவின்பால் மடிகழுவி, பரிசுத்த பாத்திரத்தில் கறந்து மூடி. பொங்கவைத்து ஆற்றி உண்ணலியலும். மாதார் பால், ஒட்டகத்துப்பால், செம்மரியாட்டுப்பால், கருவுடை கன்றின்பால், ஒரு குளம்பி இருகன்றுடைபால், கன்றூட்டாப் பால், கன்றிலாப்பால், அந்தணர் விலைபால், உப்பு மோரிட்டபால் செம்பினிற்பால், தீத்தாம்பால் பருகலொண்ணுதாம்.

ஏனைய பொருள் தன்னுடல் தொழிலிற்கேற்ப சத்வ, ரஜஸ்தமோ குணம் மேலிடவேண்டுவன ஈட்டலியலும். மூளை வேலையில் இயன்றோர் சத்வகுண பதார்த்தங்களான பனினீர், கருப்பஞ்சாறு, பால்தயிர், நெய், மிளகு, தேன், ஏலம், கார்நெல், கன்னல், கோதுமை, கறியமுது முதலியனவும் ரஜோ குணம் மேலிடவிருப்பும் கைத்தொழிலாளிகள், காரம், வாசனை திரவிய

ங்கள், அறுசுவை உறைப்பு மிகுதியுடைய பொருள்களான மிளகாய், வெங்காயம், பெருங்காயம், உள்ளி, சுக்கு, இலவங்கம், ஜாஜிக்காய், ஜாபத்திரி, பச்சைக்கற்பூரம், குங்குமப்பூ முதலியன அதிகமாய் விரும்புவார். தமோகுணம் விசேஷமாய் வேண்டுவனவாகிய பயிரிடல் முதலிய தொழிலுக்கு இராகி, அவரை, நிலக்கடலை முதலிய பொருளும் விரும்பலாகும் (தொடரும்.)

## சிவப்பிரகாச சுவாமிகளைப்பற்றிய சில கதைகள்—2.

[லால்குடி சே. கந்தசாமி, தமிழ் ஆசிரியர்,
குடியாத்தம், வட ஆற்காடு ஜில்லா.]

(124-வது பக்கத்தின் தொடர்ச்சி)

"தரிக்கிலேன் காய வாழ்க்கை,
சங்கரா—போற்றி! வான
விருத்தனே போற்றி! எங்கள்
விடலையே போற்றி! ஒப்பில்
ஒருத்தனே போற்றி! உம்பர்,
தம் பிரான் போற்றி! தில்லை
நிருத்தனே போற்றி! எங்கள்
நின்மலா போற்றி! போற்றி!!"

என்று சுவாமியார் ஒருவர், காஞ்சீபுர ஏகாம்பரேஸ்வரர் சந்நிதியில் நின்று, உடல்குழைய, என்பெலாம் நெக்குருக, விழிநீர்கள் ஊற்றெறன வெதும்பியூற்ற, தம்பிரானுக்கும் தனக்குமுள்ள ஒருறவை உன்னியுன்னி, நெஞ்சம் படபடெனப் பதைத்து நடுக்குற பாடி—யாடிக் குதித்துக்கொண்டிருந்தார். அவ்விதம் ஆடிப்பாடிக் குதித்துக் கொண்டிருந்த அன்னவர் ப்ரும்மசரியம் பூண்டவராயும், பால்யராயுமிருந்தார். 'நன்னிலப் பார்வையுடன் தீட்டப்பட்ட ஓர் ஓவியம், அதைத் தீட்டினவனுடைய சாமர்த்தியத்தைத் தெற்றெனத் தெரிவிக்குமாறுபோல், திருநீறு தரித்து, உருத்திராக்ஷதாரியாய்க் கள்ளங் கபடற்றகுணம்

குதித்துக்கொண்டிருக்க விளங்கிய அவர் வதனம், அவருள்ளத்திற் குடிகொண்டிருந்த மாசற்ற குணங்களையும், தூய்மையையும், சிவன் பாலீடுபட்டிருந்த அவர் மனத்தின் வன்மையையும் காட்டிக்கொண்டிருக்கிறது' என்று அப்போது அவரைக் கண்டிருக்கும் ஆர்தான் அறைய மாட்டார்.

பகவானையும், அவராது எண்ணிலா குணங்களையும், லீலா விநோதங்களையும் எண்ணிப் பார்த்து அகமகிழ்ந்துகொண்டிருந்த அன்னவரருகில், இன்னும் ஐந்தாறுபேருமே துதித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், அவ்விடத்திலிருந்த ஒருவர் செய்கை மாத்திரம் சிறந்து தோன்றவில்லை. அவர் பகவானைப் பஜிப்பது போல் தோன்றினாரே ஒழிய, அவர் மனமும், கண்களும் அதில் ஈடுபட்டிருக்கவில்லை. ஆனால் சுவாமிக்கு முன்புறம் போய்க் கொண்டிருந்த ஒரு பெண்ணின்மேலேயே நாட்டமுற்றிருந்தன.

அந்தப் பெண் அதிக நெட்டையாயும் இல்லாமல் குட்டையாயுமில்லாமல் பெண்களுக்கேற்ற உயரத்துடனிருந்தாள் அவளுடைய ரூபத்தைக் கண்ட எந்த ஓவியக்காரனும் அதை எழுதாமல் விடமாட்டான். அவளுடைய ரூபத்தைப் பார்த்தவர்கள், 'அவளைப் படைத்தபோது பிரமன் தன் மனைவியைப் பற்றியாவது எண்ணியிருக்கவேண்டும்; அல்லது, மனைவியும் அவனும் போட்டிபோட்டுக்கொண்டு செய்த ரூபமாயாவது இருக்கவேண்டும்' என்றெண்ணாமலிருக்க முடியாது. அவள் தேகக் கட்டும், ஆகிருதியும் ஒருநாளாவது தலைவலி கால்வலி என்று படுக்காதவள் எனக் காட்டின. ராஜாரவிவர்மா வால் தீட்டப்பட்ட படத்தைப்போல் அவளுடைய கன்னங்கள் பளபளப்பாயும், சிவந்ததாயும், கதுப்புப் பெற்றதாயும் இருந்தன. அவள் கண்கள் பிறரைக் கவரக்கூடியனவாயும், மயக்கத்தக்கனவாயும் இருந்தன. அவளுடைய கண்களைக் காணில், அவை நம்முடன் பேசிக்கொண்டிருப்பதுபோலவே தோன்றும். அவள் தலைமயிர் வண்டைவிடக் கருப்பாயிருந்தது. அவளுடைய புருவங்கள் வில்வேலைகளையும், கருவிழிகள் அம்புகளின் வேலையையும் செய்யக் காத்துக்கொண்டிருந்தன. அவள் உச்சந்தலைமுதல் உள்ளங்கால் வரையில் எந்த எந்த ஆபரணங்களை அணிந்து கொண்டால் நாகரீகமாய் இருக்குமோ அந்த அந்த அணிகலன்களை அணிந்து கொண்டிருந்தாள்.

இவ்விதம் இயற்கையழகும் செயற்கை யழகும் கூடிக் கண்டவரைக் கலக்கிக் கொண்டிருந்த பொருமகளைப் பார்த்ததும் அவர் மனம் கொஞ்சங்கொஞ்சமாய்க் கரைய ஆரம்பித்தது. ஆயினும், காவிவஸ்திரம் தரித்துச் சந்நியாசி கோலத்திலிருந்ததால், ஒன்றும் செய்ய இயலாது சித்திர ஸ்திரீயைக் கண்டு வருத்தப்படுவதினையய, கண்ணுற பருகிக் கவலைப்பட்டுக்கொண்டிருந்தார்.

திறந்த கண்களையும் வாயையும் மூடாமல் பிரமையுற்று நின்றுகொண்டிருந்த அவரைத் தற்செயலாய், நமது சுவாமியாராம் சிவப்பிரகாசர் கவனிக்க நேர்ந்தது தன் சிஷ்யர்களுள் ஒருவருக்கு இவ்வாறு சபவம் ஏற்பட்டதை நினைந்து வருந்தினாராயினும் 'அவரைத் திருத்துவது தமது கடமை' என்று எண்ணித்தாம் அதைக் கவனியாததுபோலிருந்துவிட்டார்.

மாலையும் எய்திற்று. தரிசனம் செய்து முடிந்தானபடியினால் சிஷ்யர்களை இட்டுக் கொண்டு சுவாமிகள், தமது மடாலயமிருந்து துறைமங்கலத்தை நோக்கிப் புறப்பட்டார்.

அப்படிப் போய்க்கொண்டிருந்தபோது வழியில் சுழற்காற்றடிக்கத் துவக்கிற்று. அச்சூராவளி கொஞ்சம் பலமாயிருந்தது. அதனால், அது, தன்னுடையவலிமையினால், தன்னைக் காட்டிலும் இலேசான சிறுதுரும்பைச் சுழற்றிச் சுழற்றி மேலேதூக்கிக்கொண்டுபோனதைச் சுவாமியார் கண்டார்.

அதைக் கண்டதும் சூரிய உதயம்போல் அவர்மனத்தில் ஓரெண்ணம் உதயமாயிற்று. ஆகவே திரும்பினர். சிஷ்யர்களைப் பார்த்தார். "ஏ சிஷ்யர்காள்! இதோ பாருங்கள்! இச்சூறுவளி தன் துப்பினல் இச்சின்னஞ்சிறு துரும்புகளைச் சுழற்றுகின்றது. இச்சூறுவளி, தனது வலிமை, நமது மடத்தின் கற்றூணிடம் காட்டுமா?" என்று தனக்குத் தெரியாதது போல், சிஷ்யர்கள் அறிவை அளக்கக் கேட்டார்.

அவர் வாய் மூடியதும் சிஷ்யர்களில் ஒருவர், புன்சிரிப்புடன், "குரு சிரேஷ்டரே! அஃதெவ்வாறு முடியும்? சிறுபுன் துரும்பு சுழற்றும் சூறுவளி போய்த் தன் தூப்பில் கற்றூணைச் சுழற்றுங்கொல்!" என விடை இறுத்தார்.

சிஷ்யர்களிலொருவர் சொன்ன யிதைச்செவிவாய் மடுத்து நுகர்ந்த நமது சிவப்பிரகாசர், "சிஷ்யர்காள்! நான் இப்போது சொல்லப் போகின்றதைக் கவனமாய்க் கேளுங்கள். இச்சிறு துரும்பைச் சுழற்றும் சூறுவளி வலுவற்றது என்பதே என் அபிப்பிராயம். ஏனெனில் 'பூ' என்றால் பறக்கும் தன்மைத் தான இச்சிறு துரும்புகளைச் சுழற்றுவது ஒரு சாமர்த்தியமில்லை. ஆனால் சாமர்த்தியம் பொருந்திய சூறுவளி வேறொன்றுளது. அது நம்மையே, ஏன், நம்மனத்தையே சுழற்றக்கூடியது. உதாரணமாக உரைக்கின்றேன் கேளுங்கள். மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன ஐந்து பெருஞ் சூறுவளிகள். அவை நமது மனதை இலகுவில் மயக்கக்கூடியன. உதாரணமாக என்னுடைய அனுபவத்தை அறைவதில் அழுக்கின்றென எண்ணுகிறேன். ஓர் தினம் ஓர் கோயிலுக்குச் சென்றேன். எனக்குப் பின்னாலும், முன்னாலும், பக்கத்திலும் அநேகர் குழுமி யிருந்தனர். அக்கூட்டத்தின் மத்தியில் ஓர் தவசிரேஷ்டர் இருந்ததை என் கண்கள் கண்டன. அவருடைய மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்தும் வெவ்வேறு வேலைகளைச் செய்து கொண்டிருந்தன.

எப்படியெனில் இயம்புகிறேன். அவர் மெய் பகவானுக்குச் சேவிப்பதுபோல் கைகளை மார்பளவில் குவித்து நிறுத்திக்கொண்டிருந்தது. வாய், பக்கத்திலிருந்த ஒருவருடனே வார்த்தையாடிக் கொண்டிருந்தது. கண்கள், வாத்யக்காரர்களினருகில் வீற்றிருந்த மத்தளம் போன்ற இடுப்புப்பெற்று, கொழுத்து, அழகே உருமாறி வந்ததுபோற்றோன்றிய தாசியின் மேலிருந்தன. நாசியோ, கோவிலருகில் விற்பனைக்குவைக்கப்பட்டிருந்த பலகாரத்தை முகர்ந்து பார்த்துக்கொண்டிருந்தது. மிகுதியாயிருந்த செவி என்னும் புலன் ஓர் புறமிருந்த தொனிக்கப்பட்ட

வாத்யங்களின் இனிமையில் ஈடுபட்டிருந்தது. இதுபோல் பஞ்சேந்திரியங்களும் பஞ்ச பாதைகளில் செல்ல மனம் எவ்வாறு நிலைபெற்று நிற்கும்? அப்போது மனம் என்னும் அத்துரும்பை ஐந்து புலன்களாகிய ஐந்து சுழற்கால்களும் எப்படிச் சுழற்றியிருக்கும்? யோசனை பண்ணிப்பாருங்கள். பார்க்கப் போனால், அந்த சந்நியாசியார் அவ்வித ஆவலுடன் நோக்கிய அப்பதார்த்தங்களில் என்ன ருசி இருந்தன? அப்புல்லியரை அவ்வைந்து சுழற்காற்றுக்களும் சேர்ந்து படுத்திய பாட்டுக்கு உரைபோடக்காணுமா—இச் சிறுபுன் துரும்பு பாடு?" என்று வினவினர்.

அப்போது குற்றமுள்ள நெஞ்சு குறுகுறு என்னுமாறு போல், பொதுமகனை நோக்கி நின்ற புண்யர் முன்வந்து, "குருமகராஜ்! நீர் சொல்லியதவ்வளவும் வாஸ்தவமே! ஆனால் எனக்கு சந்தேகம்! சந்நியாசி என்று சொல்லப்பட்ட அவர் மனம் ஏன் சபலித்தது? சந்நியாசியாருடைய மனமே சபலிக்குங் காலத்தில்--எங்கள் வைராக்யம் எம்மாத்திரம்? இன்று தினம், தாம் சொல்லியவாறு என் சித்தமும் கொஞ்சம் அறிவழிந்தது. அதற்கென்ன காரணம்? நான் எம்மாதிரி நடந்துவரின் அவ்வைம்பெரு சூறுவளிகளுக்கு ஆளாகமாட்டேன். தயவுசெய்து தெரிவிப்பதுடன், இன்று யான் செய்யப்புகுந்த பிழையை மன்னித்துபதேசித்தருளவேண்டும்;" என்று இரந்து வேண்டிக் கொண்டார்.

சிவபிரான் சீலரான சிவப்பிரகாசர், "சந்தோஷம்!" என்று தலையை ஆட்டிக் கீழ்வருமாறு பொதுவாய்க் கூறலானார்.

"மனம் என்பது ஒரு வஸ்து. அதன் கைக்குள் ஐந்து புலன்கள் என்று சொல்லப்பட்ட ஐந்து முரட்டுக் குதிரைகள் அடங்கியிருக்கின்றன. அவைகள் சூறுவளிக்குச் சமானமானவை. மனம் என்னும் வஸ்து சிறு புன் துரும்புபோலிருப்பின், அதை வெகு சுலபமாய்ச் சுழற்றிவிடுகின்றது. அப்படிக்கின்றி, கற்றூணைப் போலப் பலமுற்றிருப்பின், இவைகளால் ஒன்றுஞ் செய்யமுடியாது. நமது மனத்தைக் கற்றூண்போல், புலன்கள் என்னுஞ் சுழற்காற்றுக் காளாக்காதிருக்கவேண்டு

மாயின், ஐம்புலன்களையும் அடக்கவேண்டும். அவைகளைத் தத்தம் வழியில் இச்சைப்பிரகாரம் ஏகச் செய்யக்கூடாது. ஒவ்வொன்றாக ஐந்து இந்திரியங்களையும் அடக்கி, மனத்தை ஏகனிடம் செலுத்தவேண்டும். மனோதிடமற்றவர் புல்லியர். மனஸ்திரமுற்றவர் மெய்ப்பொருளைக்காணக்கூடிய புலவர். நிலையற்ற இவ்வைம்புலன்கள் நோயும் புல்லியர் தம்பால் விளையுமேயன்றி மெய்ப்புலவர் தமபால் விளையாது. ஆகையினால், என்னருஞ் சிஷர்காள் ஐம்புலன்களை முதன் முதலில் அடக்குங்கள். அடக்கி உங்களை மெய்ப்புலவர்களாகச் செய்து கொள்ளுங்கள். ஏனெனில்,

போய்ப்புலன்க ளைந்துநோய் புல்லியர்பாலன்றியே
மெய்ப்புலவர் தம்பால் விளையாவாம்—துப்பிற்
சுழற்றுங்கோல் கற்றூணைச் சூற வளிபோய்ச்
சுழற்றுஞ் சிறு புன் துரும்பு. (நன்னெறி 11)

புலன்களை வசப்படுத்த ஆசையை ஒழிக்கவேண்டும். ஆசைக்குக் காரணம் பெண்கள்மோகம். பெண்களிடம் மோகிக்கத்தக்கது என்ன இருக்கிறது? சிருஷ்டிப்பவன் மா[illegible] மாற்றி வைத்த சதையைக்கண்டு என்ன மோகம், கும்பி[illegible] நிறைக்கப்பட்டுச் செம்மண்ணாற் பூசப்பட்ட இவ்வுடலுக்குச் சுகம் என்ன? பெண்களின் மேல் வைக்கும் ஆசையைப் பகவான்மேல் வைத்தால், நமக்கு சாம்ராஜ்யத்தைக் தந்தருள்வார்.''

* * * * *

இப்படிப் பேசிக்கொண்டே போகும்போது மடாலயம் கிட்டிவிட்டது. எல்லாரும் மடத்திற்குள் நுழைந்தனர்.

* * * * *

பின்னர் தம் சிஷர்கள், தம்மைப்போலவே, வைராக்யமுற்றவராக விளங்கக்கண்டு சுவாமியார் அகமகிழ்ந்தார் என்று நான்சொல்வதும் அனுவசியம்.

அவருடைய ஒவ்வொரு சிஷ்யரும் மேற்கண்ட செய்யுளைப் பாடம் பண்ணியிருக்கிறார்கள்.

## கணிதவினு.

மழையின் பொருட்டு தங்குவதற்காக 15 கணக்கப்பிள்ளைகளும் 15 திருடர்களும் ஓர் காளிகோயிலில் போய் சேர்ந்தார்கள். தன் கோயிலில் உட்கார்ந்திருப்பவர்களில், 8 பேர்விட்டு, ஒன்பதாவது மனிதனை வெட்டுகிற வழக்கம். இவ்விஷயத்தை ஓர் கணக்கப்பிள்ளைமட்டும் கேள்வியுற்றிருந்தான் ஆகையால் ஓர் விதமான வரிசையில் திருடர்களையும் கணக்கப்பிள்ளைகளையும் உட்காரும்படி செய்தான். காளியும் வெட்டி வீழ்த்திற்று, திரு

டர் 15 பெயரும் மாண்டனர். கணக்கப்பிள்ளைகள் தப்பினர். வரிசை கிரமமாக உட்காரவைத்த கணக்கப்பிள்ளை எவ்விதம் உட்காரவைத்திருப்பார் என்பதை தெரிவிக்கவும்

ஓரங்கூர் பீ. ஜீவகாருண்யம் பிள்ளை,
தமிழ் ஆசிரியன், ஒரூர்.

## குறிப்புகள்.

சீனதேசத்தில் கல்வி கேள்விகளிற் சிறந்த பலர், சீன வாலிப சங்கத்திற் சேர்ந்து, தம்தேசத்தின் புராதன நாகரீகத்தை யிகழ்ந்து நவீன ஐரோப்பிய நாகரீகத்தில் நம்பிக்கொண்டு மயங்கியிருந்தார்கள். எனவே, சமீபத்தில் அங்குசென்று உபந்நியாஸங்கள் பலபுரிந்த டாக்டர் ரவிந்திரநாத டாகூர் இந்தியாவின் சார்பாக அடியிற்கண்ட செய்தியை விடுத்து வந்திருக்கிறார். 'அதர்மமான முறைகளைக் கையாளுவதனால் ஜனங்கள் விருத்தியடைவதையும், சத்துருக்கள் எளிதில் நாசமடைவதையும், தங்கள் கோரிக்கைகளை சுலபமாக ஈடேற்றிக்கொள்வதை ...நாம் கண்கூடாகக் காண்கிறோம். ஆனால், நாளாவட்டத்... அல்லது உடனுக்குடனேயோ, வேருடன் கெடுவது ...சயம்.

* * * * *

ஜர்மன் ராஜ்ஜியத்துத் தலைமை நகரமாகிய பெர்லினில் ப்ரொபஸர் அடால்பஸ் மீத் என்பவரும் டாக்டர் ஸ்டாமரிக்கு என்பவரும் சேர்ந்து பாதரஸத்திலிருந்து, மின்சார சக்தியைக் கொண்டு சிறு தங்கக் கட்டிகளைத் தயார் செய்திருக்கிறார்!!! சில வருஷங்களுக்குமுன் கரியிலிருந்து, வைரதுணுக்குகள் செய்யப்பட்டதை நாமிச்சமயத்தில் நம் நேயர்களுக்குக் கியாபக மூட்டி ஏராளமாக, தங்கத்தை யிம்முறையில் சிருஷ்டிப்பது அசாத்தியமான காரியம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

* * * * *

---

தர்மபுரி ஸ்ரீ கிருஷ்ணகான சபாவின் முதல் ஆண்டு நிறைவு விழா சென்ற ஸ்ரீ ஜயந்தியன்று மகா-ா-ஸ்ரீ D. சேஷகிரி அய்யர் அவர்கள் அவைத்தலைமையின்கீழ் செவ்வனே நடைபெற்றது. பிரம்மஸ்ரீ ஸ்வாமிநாத தீக்ஷிதரும் ஸ்ரீமான் P. R. சுந்தரம் அய்யர் B. A., B. L., அவர்களும் ஸ்ரீ கிருஷ்ணாவதார மஹிமையைப்பற்றியும் சமூக ஊழியத்தைப்பற்றியும் முறையே உருக்கமான பிரசங்கங்கள் புரிந்தனர். இரவு பஜனையுடன் கொண்டாட்டம் முடிவுற்றது. இச்சபை நீடூழிவாழ்ந்து நற்பயனளிக்குமாறு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"

சென்னை பிரபல
டாக்டர் யூ. ராமராவ்
தமிழ்ப்பத்திரிகையின்
க்கு வந்திருக்கிறது.
ளுக பல இடங்களில்
நோய் பரவியிருப்பதன்
தொத்துநோய்கள் பர
டிருப்பதையும் ஆசிரியர்
யும் மார்க்கத்தையும் கு
வாழ்ந்துவருவதற்கு நம
வேண்டிய அவசியத்தை
எழுதியுள்ள சிறந்தகொ
படுகிறது. குழந்தைகளுக்கு
யோருக்கும் பால் முக்கியமான
தலால் சுத்தமானபாலை உபயோ
பால் கெட்டுப்போகாமல் வைத் டிய
குறிப்பிட்டு சென்னை கார்ப்பொ காதார இ
வெளியிட்டிருக்கும் அறிக்கையின் சாராம்சம் இந்த இ

காணப்படுகின்றது. இந்த வியாஸமானது ஸ்திரீகளுக்கு மிகுந்த உபயோகமாக விருக்குமென்பதை நாம் சொல்லத் தேவையில்லை. க்ஷயரோகம் உண்டாகாமல் தடுத்துக்கொள்ளும் மார்க்கங்கள் மற்றொரு வியாசத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. சுட்ட காயங்களுக்கு சுலபமான பரிகாரம், வைசூரிக்கும் ஈக்களுக்குமுள்ள சம்பந்தம், தாய்மார்களுக்குச் சில யோசனைகள், முதலிய மற்றும் சில ருசிகரமான வியாசங்களும் இந்த சஞ்சிகையில் அடங்கியிருக்கின்றன. சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால் உண்டான நிலைமை காரணமாகச் சில இடங்களில் தொத்து நோய் பரவியிருப்பதற்கு சாமான்ய ஜனங்களின் அறியாமையே முக்கிய காரணமாகவிருப்பதனால், சுகாதார தத்துவங்களை எளிதில் அறிந்து கொள்ளும் பொருட்டு இதுபோன்ற பத்திரிகைகளைத் தமிழ்மக்கள் படித்து, சுகாதார தர்மங்களை அறிந்து கொள்ள வேண்டியதவசியம். ஏழை, தனவந்தர் என்ற வித்தியாசமின்றி எல்லோரும் இப்பத்திரிகையைப் படித்துப் பலனுறவேண்டுமென்றதாகவே வருடச் சந்த மிகவும் குறைவாக ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. வேண்டுவோர் சென்னை தம்பு செட்டித்தெரு 323-ம் நெம்பர் கட்டடத்திலுள்ள இப்பத்திரிகையின் காரியாலயத்திற்கு எழுதி சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம். வருடச்சந்தா ரூ. 1—8—0 தான்.

ஞ்சிகை.

...த்தியம், விவசாயம், வியா
...ஜனங்க சீர்திருத்தம், உலக
...தலான அரும் விஷயங்கள்
...ளிவந்துலவுகிறது.

...னேஜர்,

...பீஸ், புதுவை.

---

...ா தினி

...ச் சஞ்சிகை)

...-மீ முதல் வருட ஆரம்பம்.

...ங்கத் தக்க இனிய செந்தமிழ் நடையில் ...பிரப... ...ான்மணிகளால், எல்லா வகுப்பினர்கட் ...யாகமாகும் ட... ...ால், காவியம், புராணம், இதிகாசம், சுகா...ம், கைத்தொழில், வர்த்தகம், விவசாயம், மாதர்கட்கான கற்பிலக்கணம், மாணவரொழுக்கம், தேசாபிமானிகள் சரித்திரம், இலக்கிய விலக்கண வாராய்ச்சி, பொதுவிஷயங்கள், நவீனக்குறிப்புகள் இனிய நாவல்கள், பஞ்சாங்கம் முதலிய நாஞ விஷயங்களும் புனைந்து வெளிவரும் இதை ஆண், பெண் இருதாத்தாரும் வாங்கிப்படித்து நற்பயனடைவதற்சென்றே சந்தாவைக் குறைக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| உள்நாட்டிற்கு வருட சந்தா | ரூ. | 1 0 0 |
| பினங்கு, சிங்கப்பூர் முதலிய விடங்கட்கு | ,, | 1 8 0 |

விலாசம் (மாதிரி காப்பி இனம்.)

“சதானந்த போதினி” பத்திரிகாலயம், மாயவரம்.

---

ஓர் இனிய செந்தமிழ் நாவல்.

இராஜகோபால சந்திரவதனுள்

அல்லது

மாந்திரீக உச்சாடனம்.

முதற்பாகம் ரூ. 1—4—0 இரண்டாம் பாகம் ரூ. 1—4—0 இரண்டு பாகமும் ஒரேடயத்தில் வாங்கினுல் ரூபாய் இரண்டுதான்.

(தபாற்கூலி வேறு)

விலாசம் :—“ ஸ்ரீபாரதி வாணி ” அண்டு கோ; மங்கநல்லூர்

பட‌ங்கள்!

தங்

இதுபோன்

திருக்மோட்டார்க

ந்து வரவழைத்தி

கவரும் வண்ணம்

படங்கள்.

1 டெ டஜன்

3 டெ „ 1—

விலாசம் :

---

# இனும்!

கீழேகண்ட

பாரிஸ் வாசனைபுட்டி 1,

பொட்ளம் 1 முகத்திற்கு போ

களும் அடங்கின பெட்டி ஒன்று

மப்ளர் செண்டு ரூ 3—8—

ஒவ்ட் செண்டு „ 3—8—

ம ,

நீர்வை, பாக்கிங் போ ...ஜு, பிரத்தியேகம்.

இன்னும் அநேகவித செண்டுகள், சோப்புகள், பவுடர்கள் விலை சக மாய் சிலவரையிலும். மொத்தமாயும் கிடைக்கும். வேண்டிய தினுசுகளுக்கு விலை விபரத்திற்கு எழுதவும்.

ஒரு அணு ஸடாம்பு அனுப்பினல் இரண்டுவித வாசனை கார்டுகள் இனமாக அனுப்பப்படும்.

ஜி. எஸ். ஏஜென்ஸி, புதுவை.

---

# தர்மவித்யா பிரைஸ் சீட்டு.

(தர்மபுரியில் சமஸ்கிருத இலவச பாடசாலை ஏற்படுத்த)

ரூ. 7500 ஐ 2050 பிரைஸ்களாக கொடுக்கப்படும்.

1925-ஹு மே-மீ 20-உ பிரைஸ் துலுக்கப்படும்.

டிக்கட் 1-க்கு அணு 0—8—0.

தருமபுரியில் இலவச சமஸ்கிருத பாடசாலை ஏற்படுத்த திரவியம் சேகரிக்கும் பொருட்டு ஷெ பிரைஸ் சீட்டு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகையினல் இதைக் கண்ணுறும் நேயர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய பந்துக்களுக்கும் சிநேகிதர்களுக்கும் சிபார்சுசெய்தும் டிக்கட்டுகளைப்பெற்றும் டிக்கட்டு புஸ்தகங்களை விற்றும் நமக்கு பணம் அனுப்பிக்கொடுத்து ஷெ பள்ளிக்கூடத்தை ஏற்படுத்த தகுந்த உதவிபுரியுமாறு கோறப்படுகிறது

P. S. கிருஷ்ணன்,

மானேஜிங் டைரெக்டர்,

தர்மவித்யா பிரைஸ் சீட்டு, தர்மபுரி, சேலம் ஜில்லா.

...தகங்கள்

...ங்கள்.

...எழுதியவை.

| | ரு. | அ. | பை. |
|---|---|---|---|
| | 1 | 0 | 0 |
| ...ணி | | | |
| | 0 | 8 | 0 |
| ...க் | | | |
| | 0 | 2 | 0 |
| | 0 | 2 | 0 |
| | 0 | 8 | 0 |
| | 0 | 2 | 0 |
| | 0 | 8 | 0 |
| | 0 | 10 | 0 |

...டன் சுதா போதினி

...ம்,

...சேஷகிரி அய்யர்.

...மைலாப்பூர். மதராஸ்.

---

## ...ஞ்சீவி பிரஸ், ...புரி சேலம் ஜில்லா.

## நேர்த்தியான அச்சுவேலைகள்.

கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் பாரங்கள் ரிஜிஸ்டர்கள் முதலியன உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டு எங்களிடத்தில் எப்பொழுதும் ஆஜரில் கிடைக்கின்றன. விலை சரசமாய் கொடுக்கப்படும். தேவையுள்ளவர்கள் ஷை விலாசத்திற்கு ஆர்டர் செய்யவேணுமாய் கோறப்படுகிறது. டிஸ்டிரிக்ட் முன்சீபு கோர்ட்டு பாரங்கள் :—வக்காலத்து, படிமிமோ, நக்கல்மனு முதலிய சகலவித பாரங்களும், வில்லேஜ் முன்சீபு கோர்ட்டு, பஞ்சாயத்து கோர்ட்டு இவைகளுக்குத் தேவையான சாக்ஷி சம்மன், பிரதிவாதி சம்மன், டிக்ரி நிறைவேற்று மனு முதலியவைகளும், எலிமெண்டரி பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான மாதாந்திர வருஷாந்திர கணக்கு பாரங்கள் (Monthly and annual return forms,) பையன்கள்—உபாத்தியாயர்கள் தினசரி குறிப்பு ரிஜிஸ்டர்கள் (Boys and Masters' Attendance Registers). கோவாபரேடிவ் சொஸைடிகளுக்குத் தேவையான ரிஜிஸ்டர்கள், பாரங்கள், புத்தகங்கள், பத்திரிகைகள். நோட்டீஸ்கள் முதலியன இங்கிலீஷிலும் தமிழிலும் சீக்கிரமாகவும் சரசமாயும் செய்து தரப்படும். புக்பைண்டிங் முதலிய வேலைகளும் எற்றுக்கொள்ளப்படும்

மானேஜர் சஞ்சிவி அச்சுக்கூடம்,
தர்மபுரி.

3.

சுருக்கவே...
ங்களில் மாற...

4. பிரசுரி...
வோர் தபால்பி...

---

## சந்தாதாரர்கள் கவனிக்கவே...ண்டிய விஷயங்கள்.

1. சந்தாதாரராகச் சேர விரும்புவோர் சந்தாவை மணி ஆர்டர் மூலமாக அனுப்பி சஞ்சிகையைப்பெறுவது உசிதமானது.

2. இடமாறுதல்களை உடனுக்குடனே பத்திராதிபருக்கு தெரிவித்துக்கொண்டால் சஞ்சிகையை அவ்விலாசத்திற்கனுப் பட...

...தமெழுதும்போது அவர்களுடைய சந்தா நெம் பரை ... அதில் குறிப்பதுடன் பதிலை எதிர்பார்ப்போர் ரிப்ளை கார்டு... எழுதவேண்டும்.

4. சஞ்சிகை பிரதிமாதமும் 1-உ அனுப்பப்படுமா... சஞ்சிகை சேராதசந்தாதாரர்கள் 10-உக்குள் தெரிவிக்கவேண்டும்

5. 12 சந்தாதாரர்களை சேர்த்துக்கொடுக்கும் நேயர்களுக்கு ஒரு வருஷத்திய சஞ்சிகை இனாமாக அனுப்பிவைக்கப்படும்.

பத்திராதிபர்.

…லை
…ருவோ
…த விலாசத்

…ப ஐயர்
…ரின்சிபல் காலேஜ்
…தெரு சேலம்.

*Tel Address—"KADARSTORE"*

தந்திவிலாசம்—"கதர் ஸ்டோர்."

☞ அசல் கதர் ஜவுளிகள்!

---

எங்களிடத்தில் சொந்தபார்வையில் தயார் செய்த வேஷ்டிகள், தொட்டிக் கொட்டைத் தினுசுகளும், சீட்டி தினுசுகளும், பலவித …வர்களில் ஓரங்களில் சரிகை, பட்டுக்கரை முடிகள், சாதா … …டி அங்கவஸ்திரங்கள், சேலம் தினுசு பட்டு சரிகை… பெட்டுக்கரை வேஷ்டிகளும், நூலினால் செய்த பெட்டுக்… …களும், ஜம்பிகளும், சேலைகள், தாவணிகள், தலைப்…, தொப்பிகள், ஷால்வைகள், கைக்குட்டைகள். கொட்டடி, …தன்…கள், துப்பட்டி தினுசுகள், இன்னும் அநேக ரகங்களில் கிடைக்கும். வியாபாரிகளுக்கு விலை மிக்க சரசம்.

N. கோவிந்தராவ், கதர் ஸ்டோர், ஈரோடு.

Printed and Published by P. R. Srinivasan at
the Sanjivi Press, Dharmapuri.